விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 21 சனிக்கிழமை (05.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 198

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# இலங்கையினால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## புலனாய்வுத்துறை எச்சரிக்கை

**(கொழும்பு) இலங்கையினால் இந்தியாவுக்கு மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருப்பதாக இந்திய புலனாய்வுத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

ஏற்கனவே சீனா மற்றும் பாகிஸ்தானுடன் நெருங்கிய உறவினை இலங்கை அரசாங்கம் பேணி வருகின்றமை தொடர்பில் இந்தியா அதிருத்தி கொண்டிருந்தது. இதற்கிடையில பாகிஸ்தானிய 19 ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர்களுக்கு சொகுசு வாகனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அமைச்சர்கள மற்றும் அவைத்தலைவருக்கான சொகுசு வாகனங்கள் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இன்று மாலை ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அரசினால் வரிவிலக்கழிக்கப்பட்டு மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் வாகனங்கள் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், அமைசசர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா மற்றும் பா.டெனீஸ்வரன் ஆகியோருக்கான 4 வாகனங்கள் நேற்று கொண்டுவரப்பட்டுள்ளன.

அதன்படி குறித்த வாகனங்கள் இன்று வடக்கு 19 ஆம் பக்கம் பார்க்க....

## காரைநகரில் கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். காரைநகர் பாலவோடையின் தனியார் காணியொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைக்குண்டொன்று மீட்கபபட்டதாக ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

இது தொடர்பில் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, குண்டு செயலிழக்கும் படை 19 ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.நோக்கி வந்த வான் ஓமந்தையில் கோர விபத்து

### ஒருவர் பலி ; மூவர் படுகாயம்



(வவுனியா)

அக்கரைப்பற்றிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வான் ஓமந்தை பறநட்டகல் பகுதியில் விபத்துக்குள்ளானதில் குடும்பப் பெண் ஒருவர் பலியானார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் பயணித்த வான் சின்னா 20 ஆம் பக்கம் பார்க்க....

## கிளி.மாவட்ட செயலகத்துக்குள் நேற்றுச் செல்ல தடைவிதிப்பு !

### பொதுமக்கள் திண்டாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக நேற்று இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னிட்டு குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் மாவட்ட செயலகத்திற்குள் மக்களை செல்லவிடாது தடுத்திருந்தனர். மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும் இராணுவத்தை மக்களின் காணிகளிலிருந்து வெளியேறக்கோரியும் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னிட்டே மாவட்ட செயலகத்திற்குள் மக்கள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

இதேவேளை ஆர்ப்பாட்டத்திற்கு வந்தவர்கள் உட்சென்றுவிடக்கூடாது என்று தமக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்துள்ளதால் தான் நாம் உட்செல்ல அனுமதிவழங்க முடியவில்லை என்று பொலிஸார் தெரிவிததனர்.

இதேவேளை இந்தக்கவனயீர்ப்பு போராட்டத்தில் 20 ஆம் பக்கம் பார்க்க....

## அவுஸ்.அதிகாரி வருகிறார் !

(கொழும்பு)

அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார். 150க்கும் மேற்பட்ட இலங்கை புகலிட கோரிக் 20 ஆம் பக்கம் பார்க்க....

## நேற்றும் இரண்டு எலும்புக்கூடுகள்

(யாழ்ப்பாணம்)

முகமாலைப் பகுதியில் இருந்து நேற்றும் இரண்டு எலும்புகளின் எச்சங்களும், நீர் அள்ளும் கான் மற்றும் காலணியொன்றும் மீட்கப்பட்டதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

முகமாலை முன்னரங்கப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் பணியாளர்கள் கடநத 2 ஆம் திகதி எலும்புக்கூடு ஒன்று இருபதை அவதா 20 ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர்களுக்கு அஞ்சும் ஐ.ம.சு.மு. அரசாங்கம்

### ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தற்போது தமது அமைச்சர்களுக்கே அஞ்சுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் உரையாற்றும் போதே அவர் 20 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத்தின் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அழைப்பு


### நிராகரித்தார் முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் இன்று நடத்தப்படவுள்ள எல்லே விளையாட்டுப் போட்டிக்கு வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தங்களது தற்கொலைப் போராளிகள் நினைவாக யூலை 5 ஆம் திகதியைக் கரும்புலிகள் தினமாகக் கொண்டாடி வந்துள்ளார்கள்.

ஒப்பற்ற தியாகங்களைச் செய்த அவர்களின் நினைவுகள் தொடர்ச்சியாக மக்களின் மனங்களில் நிலை



பெற்றுவிடக் கூடாது என்ற நோக்கில் யாழ் மாவடடத்தில் இராணுவம் இந்தத் திகதியில் எல்லே விளையாட்டுப் போட்டியை ஏற்பாடு செய்திருக்கிறது. 20 ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நால்வர் மலேசியாவில் கைது !

(கோலாலம்பூர்)

மலேசியாவில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பல சுற்றிவளைப்பு தேடுதல்களில் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் எனக் கருதப்படும் 4 பேர் கைது செயயப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

புக்கிட் அம்மான் பொலிஸ் நிலைய பயங்கரவாத விசேட பிரிவின் அதிகாரிகள் கோலாலம்பூர் மற்றும் சிலாங்கூர் பகுதிகளில் மேற்கொண்ட தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் குண்டு தயாரிப்பு நிபுணர் எனவும் இவர் அகதிகளுக்காக ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரம் வழங்கிய அடையாள அட்டையை வைத்திருந்தார் எனவும் மலேசியா இன்ஸ்பெக்டர் ஜெனரல் டான் ஸ்ரீ காலித் அபுபக் 20 ஆம் பக்கம் பார்க்க....

## இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் சிங்கள மக்கள் கஷ்டப்படுகின்றனர்

### அஸ்கிரிய பீடம் தெரிவிப்பு

(கண்டி)


இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் ஏற்பட்டுள்ளதால் பௌத்த பிக்குகளும், சிங்களவர்களும் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் அஸ்கிரிய பௌத்த பீடத்தின் சங்க தெரிவுக் [illegible] தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் அடிப்படைவாதத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் பௌத்த பிக்குகளும் சிங்களவர்களும் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். அகில இலங்கை பௌத்த சமமேளன மண்டபத்தில் நடைபெற்ற விசேட செய்தி 19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பல்கலை மாணவன் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்றுக்காலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் 3 ஆம் வருட மாணவனான வவுனியா, சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் யசோதரன் (வயது -24) என்பவர் நாச்சிமார் கோவில் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் நாச்சிமார் கோவிலடியிலுள்ள வீடொன்றின் அறையில் வாடகைக்கு தங்கியிருந்து பல்கலைக்கழகத்தில் படித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுக்காலை அந்த வீட்டிலுள்ள மாமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவனின் சடலமானது நிலத்தில் கால்கள் தொட்டநிலையிலும் சடலத்தை சுற்றி இரத்தம் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ-6)

# புகலிடக் கோரிக்கையாளர்கள் சித்திரவதைக்கு உட்பட்டவர்கள்

## அகதிகள் பேரவை சுட்டிக்காட்டு

அவுஸ்திரேலியாவினால் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்களில் 11 பேர் இலங்கை புலனாய்வுப் பிரிவினரினால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் என தமிழ் அகதிகள் பேரவை தெரிவித்துள்ளது.

153 தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்களுடன் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் கடந்த வாரம் படகொன்று சென்றிருந்தமை தொடர்பில் தமிழ் சமூகத்தினரும் அகதி ஆதரவாளர்களும், ஊடகங்களும் அறிவித்திருந்தன.

படகில் சென்றவர்கள் பாதுகாப்புக்காக அவுஸ்திரேலியாவின் சுங்கக் கப்பலில் ஏற்றப்பட்டதாக கூறப்பட்டது. எனினும் அவர்கள் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில், படகில் இருந்தவர்களின உறவினர்கள் சார்பில் தான் பேசுவதாக தமிழ் அகதிகள் பேரவையின் பேச்சாளர் அரன் மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு படகில் வந்தவர்களில் குறைந்தது 11 பேர் இலங்கை புலனாய்வாளர்களின் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள்.

அவர்கள் 11 பேரும் உண்மையான புகலிட கோரிக்கையாளர்கள். இவர்களைப் போல் சம்பவங்களை எதிர்நோக்கிய பலர் அந்த படகில் இருந்திருக்கலாம்.

படகில் வந்தவர்களில் பலர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என குற்றம் சுமத்தப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள்.

11 பேரின் 5 உறவினர்களும் அந்த படகில் இருந்துள்ளனர். இவர்களும் கடந்த காலங்களில் இலங்கை புலனாய்வாளர்களால் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள்.

படகில் விடுதலைப் புலிகள் இருந்தார்களா என்பது பற்றி தெளிவாக தெரியாது. ஆனால் அதில் இருந்தவர்களில் பலர் புலிகளின் உறுப்பினர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டவர்கள்.

இலங்கையில் இருந்து தப்பிச் சென்று இந்தியாவில் அகதி முகாம்களில் இருந்த இவர்கள் படகு மூலம் அவுஸ்திரேலியா நோக்கி வந்துள்ளனர்.

இவர்கள் இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டால் நிச்சயம் அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று தமிழ் அகதிகள் பேரவை தெரிவித்துள்ளது. (எ-11)

# பேஸ்புக்கில் ரணில்!



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் புகழை உயர்த்தும நோக்கத்தில் பேஸ்புக் சமூக வலைத்தளத்தில சில பக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஜனாதிபதி ரணில் என்று குறிப்பிட்டு இந்த பக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சில வாரங்களுக்கு முன்னர் இந்த பக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கௌரவ ரணில் என்ற பெயரில் புதிய பேஸ்புக் பக்கம் ஒன்று கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த சமூக வலைத்தள பக்கங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்பாடல் பிரிவின் கீழ் நடத்தப்படவில்லை அதன பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோக பூர்வ பேஸ்புக் வலைத்தள பக்கம் ஒன்றை கொண்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (எ-11)

# பகிடிவதையில் மாணவன் மரணம்;

## சிரேஷ்ட மாணவனுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட முதலாம் வருட மாணவனான செல்வவிநாயகர் வரபிரகாஷை பகிடிவதைக்கு உட்படுத்தி அவரை கடத்திசென்று கொலைசெய்தார் என்ற குற்றஞ்சாட்டப்பட்ட பாலேந்திரா பிரசாத் சதீஸ்கரனை குற்றவாளியாக இனங்கண்ட மத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்திய திலக்க, அவருக்கு நேற்று வெள்ளிக்கிழமை மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

பொறியியல் பீட முதலாம் வருட மாணவனான செல்வவிநாயகர் வரபிரகாஷை 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி கடத்தி செல்லும் போது இந்த வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாலேந்திரா பிரசாத் சதீஸ்கரன் சிரேஷ்ட மாணவனாவார்.

பிரதிவாதியான பாலேந்திரா பிரசாத் சதீஸ்கரன், 2004 ஆம் ஆண்டு நாட்டிலிருந்து தப்பியோடிவிட்டதால் அவர் இல்லாமலே வழக்கு விசாரணை நடைபெற்றது.

வழக்கின் தீர்ப்பை நேற்று அறிவித்த நீதிபதி, நாட்டிலிருந்து தப்பியோடியுள்ள இந்த குற்றவாளியை இன்டர்போல் பொலிஸாரின் உதவியுடன் கைதுசெய்வதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறும் உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான சிவபாலசுந்தரம் கிருபாகரன், வரபிரகாஷ் கொலைசெய்யப்பட்ட இடத்தில் இருந்தபோதும் இக்கொலையுடன் அவருக்கு நேரடியான தொடர்பு இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதன்பிரகாரம் இரண்டாவது பிரதிவாதிக்கு 1500 ரூபா தண்டம் விதித்த நீதிபதி, மரணமடைந்த செல்வவிநாயகர் வரபிரகாஷின் தந்தைக்கு ஒரு இலட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறும் பணித்தார். (எ-11)

# இரா.சிப்பாய் தற்கொலை முயற்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, இரணைமடு இராணுவ தலைமையகத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் தற்கொலை செய்ய முயற்சித்து ள்ளார்.

மாத்தறை பகுதியைச் சேர்ந்த 29 வயதான இராணுவ வீரரே, தனக்குத்தானே சுட்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்தில் போது கழுத்துப் பகுதி யில் சூட்டுக் காயங்களுடன் கிளிநொச்சி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்றிரவு 10 மணியள வில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

தற்கொலை சம்பவம் தொடர்பில் கிளி நொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-11)

# மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை மாபெரும் மாட்டுவண்டில் சவாரி நடைபெற உள்ளது.

நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறும் இப்போட்டிகளில் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு முதலான வெளிமாவட்டங்களில் இருந்தும் சவாரி போட்டியாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இப்போட்டி 4 பிரிவு மாட்டு வண்டில் சோடி களுக்கு இடம்பெற உள்ளதுடன், இந் நான்கு பிரிவுகளிலும் முதலிடங்களை பெறும் ஒவ் வொரு வெற்றியாளர்களுக்கும் துவிச்சக்கர வண்டிகள் பரிசளிக்கப்பட உள்ளது. அத்துடன் 2,3,4 ஆம் இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கும் சிறப்பு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட உள்ளன. (எ-11)


# தொண்டைமானாறு தனு வெளியீட்டகம்

**22.06.2014 அன்று எமது நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட நான்காவது புலமைப்பரிசில் பொதுப் பயிற்சிப் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர் விபரங்கள் வருமாறு,**

| இல | மாணவர் பெயர் | பெற்ற புள்ளி | நிலை | பரீட்சை நிலையம் |
|---|---|---|---|---|
| 1 | யோ.அகல்யன் | 182 | 1 | சதாபொன்ஸ் க.நி, அல்வாய். |
| 2 | ம.விஷ்ணுஹரன் | 177 | 2 | நியூ எக்ஸலண்ட் க.நி, நெல்லியடி. |
| 3 | ம.சகானா | 177 | 2 | கலைவாணி க.நி, கோப்பாய். |
| 4 | சு.வினுஜா | 174 | 4 | ஸ்ரான்போட் கல்லூரி, உடுப்பிட்டி. |
| 5 | வி.விதுசன் | 172 | 5 | தனு வெளியீட்டகம்,தொண்டைமானாறு. |
| 6 | இ.பிரவீனா | 172 | 5 | சயன்ஸ் சென்ரர், பருத்தித்துறை. |
| 7 | அ.திவேதிகன் | 171 | 7 | கலைவாணி க.நி, கோப்பாய். |
| 8 | ஜெ.சஜிந்தன் | 164 | 8 | சயன்ஸ் சென்ரர், பருத்தித்துறை. |
| 9 | தி.கஜலோன் | 163 | 9 | தனு வெளியீட்டகம்,தொண்டைமானாறு. |
| 10 | க.லகீசன் | 163 | 9 | கலைவாணி க.நி, கோப்பாய். |
| 11 | ச.மிதுசா | 161 | 11 | தனு வெளியீட்டகம்,தொண்டைமானாறு. |
| 12 | உ.கரிப்பிரியன் | 160 | 12 | ஸ்ரான்போட் கல்லூரி, உடுப்பிட்டி. |
| 13 | க.கிசானி | 160 | 12 | நியூ எக்ஸலண்ட் க.நி, நெல்லியடி. |
| 14 | க.பிரணவன் | 157 | 14 | தனு வெளியீட்டகம்,தொண்டைமானாறு. |
| 15 | ருசிரஞ்சீத்தனன் | 157 | 14 | தனு வெளியீட்டகம்,தொண்டைமானாறு. |
| 16 | சு.சுபாஜினி | 157 | 14 | தனு வெளியீட்டகம்,தொண்டைமானாறு. |
| 17 | கு.பிரியதர்சினி | 157 | 14 | கம்பன் க.நி, சங்கத்தானை. |
| 18 | அ.உமாகேசன் | 156 | 18 | தனு வெளியீட்டகம்,தொண்டைமானாறு. |
| 19 | யோ.பூமிகா | 156 | 18 | கலைவாணி க.நி, கோப்பாய். |
| 20 | ம.விஷாகன் | 156 | 18 | A.T.C, இணுவில். |
| 21 | தி.சுபாங்கி | 156 | 18 | கம்பன் க.நி, சங்கத்தானை. |

**இம் மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**•எமது ஐந்தாவது பரீட்சை வழமையான பரீட்சை நிலையங்களில் 06.07.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு வழமை போல் நடைபெறும்.**

தனு வெளியீட்டகத்தினர் (C-7818)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைகளைத் தூண்டியவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர்

## நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டவர்கள் தண்டிக்கப்பட்டு நாட்டின் சட்டம், ஒழுங்கு நிலைமை உறுதி செய்யப்பட வேண்டுமென நீதி அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். மத்திய கிழக்கு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டவர்கள் சுதந்திரமாக சுற்றி திரிகின்றனர்.வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை யாகும்.

எனினும், வன்முறைகளைத் தூண்டிய அமைப்போ அல்லது தூண்டிய நபரோ இதுவரையில் தண்டிக்கப்படவில்லை .

அடிப்படைவாத அமைப்பு ஒன்றே இந்த அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் முஸ்லிம்கள் நாட்டில் அமைதியான முறையில் வாழ முடியாது.

அண்மைய சம்பவங்களின் பின்னர், பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்கள் பாதுகாப்பற்ற நிலைமையில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த இரு ஆண்டுகளாக குறித்த அடிப்படைவாத அமைப்பு, முஸ்லிம்கள் மீதும், அவர்களின் மத வழிபாட்டுத் தலங்கள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

எவ்வாறெனினும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நிவாரணங்களை வழங்கியமை வரவேற்கப்பட வேண்டியது என ஹக்கீம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

# இந்திய மீனவர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 17 பேரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்று உத்தரவிட்டார்.

இந்திய மீனவர்கள் 17 பேரும் நேற்று மீண்டும் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதவான் மேற்படி உத்தரவை வழங்கினார். கடந்த 30 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் இவர்களை முற்படுத்தியபோது நேற்றைய தினம் வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்று உத்தரவிட்டிருந்தமை தெரிந்ததே.

கடந்த 28 ஆம் திகதி மேற்படி மீனவர்களை கைது செய்த கடற்படையினர் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்திருந்தனர். (அ-2)


கிறபிக்ஸ் • அனிமேஷன் • மல்டிமீடியா

விரிவான இலவச கருத்தரங்கு

12 வருடம் அனுபவம்மிக்க விரிவுரையாளர் (CSC India)

13th July (ஞாயிறு)

CSC-ASIAN COMPUTER EDUCATION

யாழ். நகரில் 2G, ஸ்ரான்லி வீதி, T.P : 021-222 5677 (சி-7817)


## சாதனையாளர் கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு சாமுண்டாதேவி ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ வாகீஸ்வரி ச.ச.நிலையம், கல்வி வளர்ச்சிக் கழகம் விளையாட்டுக்கழகம் என்பன இணைந்து நடத்தும் சாதனையாளர் கௌரவிப்பு விழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு வாகீஸ்வரி ஞானவைரவர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சனசமூகநிலைய தலைவர் செ.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கல்வியியல் பேராசிரியர் மா. சின்னத்தம்பியும் சிறப்பு விருந்தினராக யாழ். கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் க.தவகீஸ்வரனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ)


துயர் பகிர்கின்றோம்



யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்ஸ்மி இராசநாயகம் அவர்களின் பாசமிகு தந்தையார்

**வேலுப்பிள்ளை மார்க்கண்டு**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**துறைத்தலைவர், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.** (6835)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 11.06.1916 மறைவு 05.06.2014



அமரர் கந்தையா தம்பையா (ஓய்வு பெற்ற ஆசிரியர், காணி உறுதி எழுதுபவர்)

கடந்த 05.06.2014 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் வியாழனன்று (03.07.2014) கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று 05.07.2014 எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

காலையடி தெற்கு பண்டத்தரிப்பு. (6819) குடும்பத்தினர்.


# இராசி பலன்

**05.07.2014**

**(ஆனி 21, சனிக்கிழமை)**

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
அட்டமி பின்னிரவு 2.02 மணிவரை
அத்தம் முன்னிரவு 10.04 மணிவரை
இராகுகாலம் 8.57-10.27 மணிவரை
சுபநேரம் 2.57-4.27 மணிவரை

வளவன்

**மேடம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும், உறவினர் வருகையுண்டு, கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி பெறும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிட்டும்.

**இடபம்:** வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் சந்தோசம் கிடைக்கும், பொதுக்கா ரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கடகம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், உடன்பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சான்றோர் சந்திப்புண்டு,பேச்சில் இனிமை தென்படும், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி:** தொலைபேசி வழியில் மனதிற்கு நிம்மதி தரும் செய்திகள் வந்து சேரலாம், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கொள்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்லவேண்டிய நாள்

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றங்கள் உருவாகலாம், ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**தனுசு:** தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்:** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சிலருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்:** மற்றவர்களிடம் பேசும்போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது, விரயங்கள் கூடும், பிரயாண பயமுண்டு, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மீனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம்,சொந்த பந்தங்களின் வருகையுண்டு, வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், செய்தொழில் மேன்மையுண்டு, விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# நைற்றாவின் ஏற்பாட்டில் கணனி வன்பொருள் கற்கை


(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் (Computer Hardware Technician) பயிற்சி நெறியில் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழைப் பெற யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான கல்வித் தகைமைகளாக, க.பொ.த .(சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும், விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA, இல. 44, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணனி வன்பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும் எனவும் மாவட்ட முகாமையாளர் கி.கிருஸ்ணபாலன் அறிவித்துள்ளார். (அ)




# பொருட்களை திருடிய சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

பல்பொருள் வியாபார நிலையமொன்றில் பொருட்களை திருடினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்.உடுப்பிட்டி பகுதியிலுள்ள வியாபார நிலையமொன்றில் கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மானிப்பாயை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

வல்வெட்டித்துறை பொலிஸாரின் விசேட புலனாய்வுத்துறைப் பிரிவினரால் மானிப்பாயில் வைத்து கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட மேற்குறித்த இருவரையும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

குறித்த வழக்கை விசாரணை செய்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கே.கஜநிதிபாலன் திருட்டு சந்தேக நபர்களினை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (2-4)

# வீதி விளக்குகள் ஒளிராமையால் மக்கள் பயணிப்பதில் சிரமம்

## உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்களா?

வலி.வடக்கு மாவிட்டபுரம் 10 ஆம் கட்டை ஒழுங்கையில் உள்ள வீதி விளக்குகள் ஒளிராமையால் அவ் வீதி இருள் சூழ்ந்து காணப்படுவதாக அப் பிரதேச வாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியில் இரண்டு வீதி விளக்குகள் மட்டும் பொருத்தப்பட்ட நிலையில் ஒளிர்கின்றது.

ஆனால் அவ்விரு விளக்குகள் ஒளிர்ந்தாலும் குறித்த வீதி ஒளிபெறாது என பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் இவ் வீதியூடாக இரவு நேரத்தில் பயணிக்கும் போது அச்சம் ஏற்படுவதாக பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏனெனில் இவ்வீதியில் திருட்டுச் சம்பவங்களும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பாக வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரிடம் கடித மூல கோரிக்கை பொதுமக்களால் விடப்பட்டிருந்தது.

ஆனால் இது வரைக்கும் தவிசாளரினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே, இருளினால் சூழ்ந்துள்ள வீதியினை ஒளியேற்றித் தருமாறு அப் பிரதேசமக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

## 3 ஆம் வருட வகுப்புக்கள் இன்று ஆரம்பம்

நெல்லியடி கற்கை நிலையத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி 2011/2013 பயிற்சி நெறியினைப் பின்பற்றும் ஆசிரிய மாணவர்களுக்கான 3 ஆம் வருட வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யா/நெல்லியடி மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது என நெல்லியடி தேசிய கல்வி நிறுவன கல்விமாணி கற்கைநெறி இணைப்பாளர் செ.சேதுராஜா அறிவித்துள்ளார்.

குறித்த மாணவர்களையும் இப் பயிற்சி நெறியின் கல்விசார் பாட விரிவுரையாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் அவர் மேலும் கேட்டுக் கொள்கின்றார். (அ)



யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் மகிந்தோதய தொழில்நுட்ப பீடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அடிக்கல்லினை நாட்டி வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)




## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்து சமய அபிவிருத்திச் சங்க முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/விவேகானந்த வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாக இந்து சமய விருத்திச் சங்க தலைவர் நடராஜா-விவேகானந்தராஜா அறிவித்துள்ளார்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி.தென் மேற்கு பிரதேச சபை தவிசாளரும் மேற்படி சங்கத்தின் முன்னாள் தலைவருமாகிய ச.சிவகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றூபா உதயரட்ணம், சண்டிலிப்பாய் முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. கேமநளினி யோகேந்திரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் ராஜேஸ்வரி சுப்பையாப்பிள்ளை, திருமதி.சிவராஜினி கோவிந்தராஜன், விவேகானந்த வித்தியாசாலை அதிபர் திருமதி.ச.சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆

கார்மேல் முன்பள்ளியினால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இராசாவின் தோட்டத்தில் அமைந்துள்ள புனித திரேசா தேவாலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அருட்தந்தை சகாய நாயகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (2)

## கூட்டுறவு ஆய்வு மாநாடு

வடமாகாண சமூகநலத்துறை மற்றும் காணி அமைச்சின் உள்ளூராட்சி கூட்டுறவு மற்றும் கைத்தொழில் துறையினரால் வடமாகாண பொருளாதார சமூக கலாசார மேம்பாட்டில் கூட்டுறவின் வகிபாகம் என்ற மையக்கருவினை கருத்தாகக் கொண்ட கூட்டுறவு ஆய்வு மாநாடு இன்று சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

மேலும் இந்நிகழ்வில் ஆய்வு தொடர்பான கருத்துரைகள், ஆய்வுக்களம் என்பன இடம்பெறும். (2)

# நிறுத்தல் அளவைக் கருவிகள் முத்திரையிடப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உப அலுவலகங்களில் குறிப்பிட்ட திகதிகளில் யாழ்.மாவட்ட செயலக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடப்பட இருப்பதாக வலி.கிழக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி தி.தவராஜா அறிவித்துள்ளார்.

வர்த்தகர்கள், வியாபாரிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிட்ட திகதிகளில் வலி.கிழக்கு பிரதேசசபை உப அலுவலகங்களில் முத்திரையிட்டுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 7, 8, 10ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை அச்சுவேலி வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலகத்திலும் எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை கோப்பாய் வலி.கிழக்கு பிரதேசசபை உப அலுவலகத்திலும் எதிர்வரும் 21,22 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை உரும்பிராய் வலி.கிழக்கு பிரதேசசபை உப அலுவலகத்திலும் முத்திரையிடப்படவுள்ளன. (அ-2)

# பாடசாலை வீதியை செப்பனிடுங்கள்; மாணவர்கள் கோரிக்கை

கரணவாய் செல்வாபுரம் வீதி நீண்ட கால மாக செப்பனிடப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதாக அப்பிரதேச பொது மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீதியை 151 குடும்பத்தைச் சேர்ந்த கரணவாய் மணியகாரன் தோட்ட அ.த.க பாடசாலையில் கல்வி பயிலும் 184 மாணவர்கள் தினமும் பயணித்து வருகின்றனர்.

ஆனால் இவ்வீதி இதுவரை காலமும் திருத்தப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் வீதித் திருத்தம் இடம்பெற்றும் எமது பாடசாலை வீதி கவனிப்பாரின்றிகாணப்படுவதாக மாணவர்கள் மற்றும் பொது மக்களால் சுட்டிக் காட்டப் படுகிறது.

குறிப்பாக மழை காலத்தில் இவ் வீதியை இணைக்கும் மூன்று வீதிகளினால் வருகின்ற வெள்ளமானது இவ் வீதியூடாகவே பாய்ந்து செல்கின்றது. சில நேரங்களில் குழிகளில் நீர் தேங்கி நிற்பதனால் அவ் வீதியூடாகப் பயணிப்பவர்கள் மீது தெறிக்கப்படுகிறது.

அத்துடன் மழை வெள்ளத்தால் இவ் வீதியின் குன்றுகள் கூடுதலாக அரித்துச் செல்லப்படுகிறது.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு குறித்த வீதியினை செப்பனிட்டுத் தருமாறு அப்பிரதேச மக்கள் மற்றும் கரணவாய் அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகத்தினர் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-60)

# மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் படுகாயம்

மோட்டார்சைக்கிளை கனரகவாகனம் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எதிரே இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் படுகாயமடைந்த நபரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த அமலதாஸ் றெக்னோ (வயது 23) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த குறித்த இளைஞன் தனது தாயாருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது கன்டர் ரக வாகனம் மோட்டார் சைக்கிளை மோதியுள்ளது. இதன்போதே மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞன் படுகாயமடைந்ததோடு தாய் எவ்வித பாதிப்புமின்றி தப்பினார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் குளத்துக்கான குடிநீர் விநியோகத்தை சீராக்குங்கள்

(கிளிநொச்சி)

நாளொன்றுக்குநான்குதடவைகள் குடிநீர் வழங்கப்படுகின்றபோதும் அதனால் முழுமையாக பயன் பெற முடியாமலிருப்பதாக அம்பாள் குளம் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

அம்பாள் குள கிராமத்தில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு மேற்படி கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் து.கிருஷ்ணசாமியின் வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் இக்கிராமத்திற்கு தினமும் நான்கு தடவைகள் பவுசர் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

அம்பாள்குளப் பகுதிக்கு மிக அண்மையாக இருக்கும் பகுதிகளில் வைத்தே குடிநீர் வழங்கப்படும் நிலையில் குறித்த நேரத்திற்கும் தண்ணீர் பவுசர்கள் வருவதில்லை.

இதன்காரணமாக கிராமத்தின் ஏனைய பகுதிகளில் உள்ளவர்களால் இச்சேவையை பெறமுடியாமலிருப்பதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மேற்படி கிராமத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்க அலுவலகம், பொது நோக்கு மண்டபம் மற்றும் துர்க்கை அம்மன் கோயிலடி போன்ற இடங்களில் குறிப்பிட்ட நேரத்திற்கு தண்ணீர் பவுசர்கள் வருவதன் மூலம் எல்லோரும் குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

அல்லது குறித்த பகுதிகளில் நிலையான குடிநீர் தாங்கிகளை நிறுவுவதன் மூலமாகவும் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, மிகவும் அத்தியாவசியமான இச்சேவையை இக்கிராமத்திலுள்ள அனைவரும் பெற்றுக் கொள்ளக்கூடிய முறையில் வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-271)

# மரங்களுக்கு கீழான கல்வி செயற்பாடு முற்றுப் பெறும் நிலையில் உள்ளது

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மரங்களுக்கு கீழான கல்விச் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டு வரும் இலக்கில் வெற்றி பெற்றிருக்கின்றோம் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சி ஆனைவிழுந்தான் ஐயனார்புரம் அ.த.க. பாடசாலையில் 56 இலட்சம் ரூபா செலவில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதி பங்களிப்பில் சேவாலங்கா நிறுவனத்தினரால் அமைக்கப்படுகின்ற வகுப்பறை கட்டட தொகுதிக்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கிளிநொச்சியின் கல்வித் துறையில் கடந்த சில ஆண்டுகளாக செலுத்திய அதிக அக்கறை காரணமாக இந்த மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பெருமளவு பாடசாலைகள். வகுப்பறை கட்டடங்களை பெற்றுள்ளன.

அது மட்டுமின்றி ஏனைய பல் வேறு திட்டங்கள் மூலம் பல பாடசாலைகளுக்கு பல பௌதீக ரீதியிலான வளங்களை பெற்றுக் கொடுத் துள்ளோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேற்றத்தின் போது பெருமளவில் அனைத்து பாடசாலைகளிலும் கல்விச் செயற்பாடுகள் மரங்களுக்கு கீழேயே நடைபெற்று வந்தது.

இதனை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்ற இலக்கில் கடந்த சில ஆண்டுகளாக நாம் செயற்பட்டதன் பயனாக இன்று அந்த இலக்கில் நாம் வெற்றி பெற்றுள்ளோம்.

ஒரு சமூகத்தை கல்வியில் முன்னேற்றிவிட்டால் அந்தச் சமூகம் தனது எல்லாத் துறைகளிலும் இயல்பாகவே முன்னேற்றம் கண்டுவிடும். அந்த வகையில் நாம் இதில் வெற்றியும் கண்டுள்ளோம்.

எனவே தொடர்ந்தும் இந்த மாவட்டத்தின் கல்விக்காக எங்களாலான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)




# வடமாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு 23 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன

(கிளிநொச்சி)

வடமாகாணத்திலுள்ள பொலிஸார் இலஞ்சம் வாங்கும் நடவடிக்கையில் ஈடுபடுவது முற்றாக இல்லாமல் செய்யப்படவேண்டுமென வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

வடமாகாண பொலிஸாருக்கு 500 சிசி திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு இரணைமடு இராணுவ முகாமின் நெலும் பியச மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

33 இலட்சம் ரூபா பெறுமதியுடைய 279 மோட்டார் சைக்கிள்கள் இலங்கையிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வழங்குவதற்கென இறக்குமதி செய்யப்பட்டன.

இவற்றில் 23 மோட்டார் சைக்கிள்கள் வடமாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அவை பொலிஸாரிடம் கையளிக் கப்பட்டன.

இந்த மோட்டார் சைக்கிள்கள் மூலம் ஏ-9 வீதி, ஏ-32 வீதி (யாழ்ப்பாணம்-மன்னார்) மற்றும் ஏ-35 (பரந்தன்- முல்லைத்தீவு) வீதி உள்ளிட்ட முக்கிய வீதிகளில் ரோந்து நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபடவுள்ளனர்.

இந்த ரோந்து நடவடிக்கை மூலம் விபத்துக்களைக் குறைத்தல், வாகனங்களை தரிப்பிடங்களில் நிறுத்துவதை ஒழுங்குபடுத்தல், பொது மக்களின் சொத்துக்களைப் பாதுகாத்தல், வீதி ஒழுங்குகளைப் பேணுதல் போன்ற செயற்பாடுகளில் பொலிஸார் ஈடுபடவுள்ளனர்.

குறித்த மோட்டார் சைக்கிளை பயன்படுத்துவதற்கு நால்வர் கொண்ட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ரோந்து நடவடிக்கைகள் சம்பிரதாய பூர்வமாக நாளை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

அத்துடன் பொலிஸார் தங்களுக்குத் தெரிந்தவர்கள் மீது வழக்குப் போடாமல் விடுதல், இலஞ்சம் வாங்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது எனவும் பொலிஸாரை கடமை செய்யவிடாது தடுப்பவர்கள் மீது உடனடி நடவடிக் கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடமாகாணத்திற்கு வழங்கப்பட்ட 23 மோட்டார் சைக்கிள்களில் கிளிநொச்சி, மாங்குளம், யாழ்ப்பாணத்துக்கு 4 என்ற வீதத்திலும் முல்லைத்தீவு, காங்கேசன்துறைக்கு 2 மோட்டார் சைக்கிள்களும் வவுனியாவுக்கு 5, மன்னாருக்கு 2 என்ற வீதத்திலும் அங்குள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. (அ-2-4)

# எமது நிலம் எமக்கு வேண்டும்; கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போர்








கிளிநொச்சி மாவட்டத்தில் பரவிப்பாஞ்சான் உள்ளிட்ட பல பகுதிகளில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழரின் பூர்வீக நிலங்களில் அவர்களை மீள்குடியேற்ற வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக இரண்டாம் கட்டமாக நேற்றைய தினம கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 11 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாண விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாணசபையின் ஆளும்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவர் அ.ஆனந்தராஜா உள்ளிட்ட பலர் பங்கு கொண்டிருந்தனர்.

இந்தப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த பரவிப்பாஞ்சான் பகுதியைச்சேர்ந்த மக்கள் இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ள தமது காணிகளின் உறுதிகளையும் கைகளில் ஏந்தியபடி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததோடு போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவப்புலனாய்வாளர்களும் அதிகளவில் பிரசன்னமாகி புகைப் படங்கள் எடுப்பதில் தீவிரம் காட்டியிருந்தனர்.

யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் கிளிநொச்சியில் பரவிப்பாஞ்சான் உள்ளிட்ட பல பகுதிகளில் மக்களது வீடுகளையும், பொது நிலையங்களையும் இராணுவம் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ளதால் இடம்பெயர்ந்துள்ள நூற்றுக் கணக்கான குடும்பங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்ப முடியாதுள்ளனர்.

சுமார் 200 ஏக்கர் காணியை இராணுவப்படைத்தரப்பு ஆக்கிரமித்து வைத்துள்ள நிலையில் அப்பகுதியைச்சேர்ந்த மக்கள் மீள் குடியேற முடியாமல் ஏதிலிகளாக அலைந்து திரிந்து வருகின்றனர்.

பல ஆண்டுகளாக உறவினர், நண்பர்கள் வீடுகளில் அகதிகளாக அவல வாழ்வு வாழ்ந்து வரும் இந்த ப்பகுதி மக்களின் மீள் குடியமர்வை வலியுறுத்தி கடந்த மே மாதம் 28 ஆம் திகதி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி நடத்தியிருந்தது.

எனினும் இன்றுவரை அம் மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாக எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படவிலலை.

இந்நிலையில் பரவிப்பாஞ்சான் உட்பட இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்குச் சொந்தமான காணிகள், வீடுகளில் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து உடனடியாக வெளியேறுவதுடன், அந்த வீடுகளையும், நிலங்களையும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரியும், இது தொடர்பில் சர்வதேச சமூகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியும் மீண்டும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று இடம்பெற்றது.

இதேவேளை இந்தப்போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களும் அரசியல் பிரமுகர்களும் இராணுவத்திற்கு எதிராகவும் அரசாங்கத்திற்கு எதிராகவும் எதிர்ப்பு கோசங்களை எழுப்பியதோடு மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜரும் கையளித்தனர்.

மேலும் மீள்குடியேற்றத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரைவுபடுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதேவேளை யுத்தம் காரணமாக சொந்த இடங்களைவிட்டு வெியேறிய மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றும் வரை நிலம் மீட்கும் போராட்டம் தொடரும் என்றும் எச்சரிக்கை விடுத்தனர். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேசசபை செயலாளரின் இடமாற்றத்தை இரத்து செய்க

## சபையின் உத்தியோகத்தர்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

கரைதுரைப்பற்று பிரதேச சபை செயலாளர் 2014.07.03 இல் நடைமுறைக்கு வரும் வகையில் இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளதை இரத்துச் செய்யுமாறு கரைதுறைப்பற்று பிரதேச சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இம் மகஜரின் பிரதிகள், வடக்கு மாகாண ஆளுநர், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சித்திணைக்களஆணையாளர், முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவர்கள் அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது செயலாளர் உடனடியாக செயற்படும் வண்ணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளதாக எம்மால் அறியக் கூடியதாக உள்ளது.


எமது அலுவலகம் கடந்த காலங்களில் அலுவலக முறைமை, மக்கள் தொடர்பு, நிர்வாகம், அலுவலக வளாகம், உத்தியோகத்தர்களின் செயற்றிறன் மற்றும் பிரதேச வளர்ச்சி என்பன மிகவும் மந்த நிலையில் காணப்பட்டமை யாவரும் அறிந்த விடயமே.

தற்போது எமது செயலாளர் சு.ரவீந்திரநாதன், அவர்கள் பொறுப்பேற்றதன் பின்னர் மேற்கூறப்பட்ட சகல விடயங்களும் நிவர்த்தி செய்யப்பட்டு எமது சபை மிகவும் முன்னேற்றமும் வளர்ச்சியும் கண்டு வரும் வேளையில் இவ்வாறானதொரு திடீர் இடமாற்றம் எமக்கும் எமது பிரதேச மக்களுக்கும் பேரிழப்பாக உள்ளதென்பதை மிகவும் மன வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

மேற்படி இவ் இடமாற்றத்திற்கான காரணம் அண்மையில் எமது அலு வலகத்தில் நடைபெற்ற சுகாதாரத் தொழிலாளிகளின் பணிப் பகிஷ்கரிப்போ என ஐயப்பட வைத்துள்ளது.

அவ்வாறாயின் அது தொடர்பில் பூரண விசாரணை மேற்கொண்டு ஓர் தீர்வு எட்டப்படும் வரையேனும் இவ்விடமாற்றத்தினை இரத்துச் செய்து இச் சபையின் வளர்ச்சிக்கு எமது செயலாளரின் சேவை தொடர ஆவன செய்து உதவுமாறு இச் சபையின் பணியாளர்களாகிய நாம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-267)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சிவில் பாதுகாப்பு தொடர்பான கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தமயந்தி விஜேசிறி, சிவில் பாதுகாப்பு தொடர்பாக விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்:-கரணவாய் செய்தியாளர்)

## புலமைப்பரிசில் தொடர் கருத்தரங்கு நாளை

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வருடாந்தம் நடத்தும் இலவச புலமைப் பரிசில் தொடர் கருத்தரங்கின் 2 ஆவது அமர்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் 2.30 மணி வரை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் கு.கலாமோகனால் மேற்கொள்ளப்படுகின்ற இக் கருத்தரங்கில் பங்குகொள்கின்ற மாணவர்கள் அன்றைய தினம் மண்டப வாயிலில் பதிவுகளை மேற் கொள்ள முடியும்.

இக் கருத்தரங்குகள் முற்றிலும் இலவசமாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக புலமைச்சுடர் ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட முதலாவது கருத்தரங்கில் சுமார் 700 மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (2-23)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 500 | 600 |
| தக்காளி | 220 | 220 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 60 |
| கோவா | 160 | 140 | 150 | 160 |
| கரட் | 200 | 180 | 170 | 200 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 60 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 60-120 | 80 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 240 | 180 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 70 | 100 |
| பயற்றங்காய் | 180 | 160 | 130 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 240 | 170 | 200 |
| போஞ்சி | 120 | 140 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 50 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 | 20 |
| தேசிக்காய் | 60 | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 10-40 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 65

சயூ சயூரன்



கோவிலுக்கு வெளியே நம்மிடம் பிச்சைக்காரன் எதை எதிர்பார்க்கிறானோ அதைத்தான் நாம் கோவிலுக்குள் சாமியிடம் கேட்கிறோம்...

சுபாகீதன் சத்தியமூர்த்தி




தீபன் சற்குணம்

பெண்ணே...
உன் கண்கள் ஒரு திங்கள்
உன் காது ஒரு செவ்வாய்
உன் கன்னம் ஒரு புதன்
உன் மூக்கு ஒரு வியாழன்
உன் உதடு ஒரு வெள்ளி
மொத்தத்தில் நீ எனக்கு பிடிச்ச ஒரு சனி...!!!



கீர்த்து கரன்

எல்கேஜிப் பையன் : என்னை உங்களுக்கு பிடிச்சிருக்கா?
ஆசிரியர் : ஆமாம்
எல்கேஜிப் பையன் : அப்படியானால் என் அப்பா,அம்மாவை வரச் சொல்லி உங்கள் வீட்டில் வந்து பேசச் சொல்லட்டுமா?
ஆசிரியர் : டேய் முட்டாள்... உன் மனசுல என்ன நினைச்சுக் கிட்டிருக்க?
எல்கேஜிப் பையன் : ஹேய்ய்... நான் ரியூசனுக்கு வர்றதைப்பற்றி சொன்னேன்.




கபினேஷ் கபி



சாரு நிஷா

பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன் கேட்கும் போதுதான் தெரியும்....!!



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளுத்கம சேதங்களை புனரமைக்க நிதியொதுக்கீடுகள் போதாது

## முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

அளுத்கம வன்முறைகளின்போது ஏற்பட்ட சேதங்களை புனரமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் போதுமானவையல்ல என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி இதனை குறிப்பிட்டுள்ளார்.

அளுத்கம புனர் அமைப்புக்காக 200 மில்லியன் ரூபாய்களை இலங்கை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இந்நிலையில் இது. கட்டட சேதங்களை மறைக்கக்கூட போதாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதியாக முஸ்லிம்கள் தம்மை தாமே தாக்கிக் கொண்டதாகவும் தமது வீடுகளுக்கு தாமே தீயிட்டுக் கொண்டதாகவும் அரசாங்கம் கூறுவதாக ஹசன் அலி குறிப்பிட்டார்.

இலங்கை எமது நாடு. எனவே அங்கிருந்து வெளியேறவோ அல்லது மற்றவரின் உதவியை எதிர்பார்க்கவோ தேவையில்லை என்றும் ஹசன் அலி தெரிவித்தார். (2)

# அளுத்கம, பேருவளை சம்பவம் தொடர்பில் 117 பேர் கைது

அளுத்கம மற்றும் பேருவளையில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை 117 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

கைது செய்யப்பட்டோரில் 88 பேர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப் பட்டுள்ளனர். இவர்களில் 25 பேர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே, பொதுபல சேனா அமைப்பின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசீர தேரரிடம் குற்றவிசாரணை பிரிவினர் விசாரணை நடத்தி வாக்குமூலங்களை பதிவு செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (2)

# சர்வதேச தரத்தையுடைய 18 விருதுகள் வடக்கிலும் வழங்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தரத்தையுடைய 18 இற்கும் மேற்பட்ட விருதுகள் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்களுக்கு வட மாகாணத்தில் முதன் முறையாக வழங்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத் தலைவர் கே. பூரணச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ராசாவின் தோட்டம் வீதியிலுள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றமும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படுகின்ற தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபையினரும் இணைந்து ஒழுங்கு செய்யும் மேற்படி விருது வழங்கும் நிகழ்வானது வட மாகாணத்தில் முதன்முறையாக இடம் பெறவுள்ளது.

வடமாகாணத்தினைச் சேர்ந்த சிறந்த கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான அங்கீகாரமாக மேற்படி நிகழ்வு விளங்குவதுடன் கைத்தொழில்துறையினரை மேலும் ஊக்குவித்து மொத்த தேசிய உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்காளராகவும் மற்றும் சர்வதேச ரீதியில் அவர்களை மேலும் தரப்படுத்துவதாகவும் அமையவுள்ளது. மேற்படி நிகழ்வில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த சிறந்த தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

குறுகிய, சிறிய, நடுத்தர மற்றும் பெரியளவிலான தொழிற்றுறைகளாக இனங்காணப் பட்டு 18 இற்கும் மேற்பட்ட விருதுகளுக்காக போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

வடபகுதியின் கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றப்படுவதுடன் புதிய கைத்தொழில் களும் ஆரம்பிக்கப்படுகின்றன. மக்களின் வாழ்க்கை முறையில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

இதனால் கடந்த நான்கு வருடங்களில் வட பகுதி தொழிற்றுறையானது குறிப்பிடத் தக்க வகையில் வளர்ச்சிகண்டு வருகின்றது. அத்துடன் வங்கி வசதிகள் கடந்த நான்கு வருடங்களில் பாரிய முன்னேற்றத்தினைக் கொண்டுள்ளன.2009 ஆம் வருடம் 9.9 ஆக காணப்பட்ட வடமாகாணத்தின் வங்கி அடர்த்தியானது 2013 ஆம் வருடம் 21.5 ஆக உயர்ந்துள்ளது. மாகாண மட்டத்தில் மேல்மாகாணத்தினையும் பின்தள்ளி முதலாவது இடத்தினை பிடித்துள்ளது.

வடபுல தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற தொடர்ச்சியான எமது மன்றத்தின் நிகழ்ச்சி நிரலின் குறிப்பிடத்தக்க ஓர் மைல்கல்லாக மேற்படி நிகழ்வு விளங்கும்.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, வடமாகாண கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனங்கள், வடமாகாண சபை, அரசாங்க மற்றும் ஏனைய அனைத்து தொடர்புபட்ட நிறுவனங்களது ஒத்துழைப்பு மற்றும் அனுசரணையுடன் மேற்படி நிகழ்வானது எதிர்வரும் புரட்டாதி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அனுசம் 1
கி.பா; 6.75 செவ் 12 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: BED, கல்வியியற் கல்லூரி / ஆசிரியர்
தொ.இ: B/3316

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 28.25 சூரி செவ் 4 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: A/L / TV மெக்கானிக்
தொ.இ: B/3317

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரோகினி 4
கி.பா: 33.5 செவ் 8 இல்
உயரம்: 6’
தகைமை/தொழில்: A/L, / Technical Officer
தொ.இ: B/3318

பிறப்பு: 1984 கிறிஸ்தவம் RC
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 31.25
உயரம்: 5’4"
தகைமை/தொழில்: A/L / உதவி முகாமையாளர்
தொ.இ: B/3319

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 15
உயரம்: 5’5"
தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்
தொ.இ: G/3324

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 55.5 சூரி செவ் 11 இல்
உயரம்: 5’3"
தகைமை/தொழில்: Dip. in Nursing, HNDA – II Year / தாதிய உத்தியோகத்தர்
தொ.இ: G/3326

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 45.5 செவ் 4 இல்
உயரம்: 5’3"
தகைமை/தொழில்: BFA நுண்கலைமாணி /ஆசிரியர்
தொ.இ: G/3331

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: 40 செவ் 12 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்: BA / விஞ்ஞான ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பெண் கணவனை இழந்தவர்
தொ.இ: G/3332

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)



சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் (வ-து)
**CHAVAKACHCHERI PALM DEVELOPMENT CO - OPERATIVE SOCIETY (LTD)**
பதிவு இல./Regd No: J/1594 of 11.03.1972
டச்சு வீதி, சாவகச்சேரி
021 321 3572, 021 227 0086
Dutch Road, Chavakachcheri

**கட்டட ஒப்பந்தகாரர் கூறுவிலை கோரல்**

கைதடி மேற்கு மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள எமது சங்கத்திற்கு சொந்தமான 3 பரப்பு காணியில் 32 அடி நீளமும், 16 அடி அகலமும் கொண்ட நவீன தவறணை கட்டடம் அமைத்து அக்கட்டடத்திற்கு பூச்சு பூசி வர்ணம் பூசுவதற்கும், உள்சீற் அடிப்பதற்கும், 03 பரப்பு காணிக்கு சுற்றுமதில் (பூச்சுக்கள் இல்லை) மலசலகூடம் என்பன அமைப்பதற்குமான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களுடைய விண்ணப்பங்களை 20. 07. 2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


(குறிப்பு – மேலதிக விபரங்கள் அதற்கான வரைபடங்கள் எமது சங்க காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்)

தலைவர்
பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்
சாவகச்சேரி

C7813


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




...ராஜாவும் அதை ஏற்றுக்கொண்டார். யாரும் வாங்க முடியாத அளவுக்கு இறைச்சி விலை அதிகரிக்கப்பட்டது. ஸ்னேர் பிச்சை எடுக்கச் சென்றான். குக்குவின் வீட்டில் அவனுக்கு இறைச்சித் துண்டு கிடைத்தது. அதைச் சாப்பிட்டு விட்டு, அந்த வீட்டில் ஒரு சிவப்பு அடையாளம் இட்டான். உடனே ராஜாவுக்கு விவரம் சொன்னான். ஆனால், ராஜாவின் படை வீரர்கள் வந்து பரிசோதித்தபோது நாட்டில் உள்ள அனைத்து வீடுகளின் கதவுகளிலும் சிவப்பு அடையாளம் இருந்தது. வீரர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

குக்குவும் மிக்குவும் செய்த தந்திரம்தான் அது. அன்றே ஸ்னேர், ராஜாவுக்கு மற்றொரு யோசனையைச் சொன்னான். அந்த இரண்டு திருடர்களும் கஜானாவின் பணத்தைக் கொள்ளை அடிப்பதற்காக மீண்டும் வருவார்கள். ஒரு பொய்யான வாயிற்படிவைத்து, அதன் கீழே ஒரு பள்ளம் வெட்ட வேண்டும். பள்ளத்தில் கொதிக்கும் நீரை நிறைக்க வேண்டும். இரவு நேரம் அவர்கள் படியில் கால் வைக்கும்போது, அந்தப் படிக்கட்டு கொதிக்கும் நீரில் மூழ்கும். அப்போது திருடர்களும் நீரில் விழுவார்கள் என்றான். அந்த யோசனையும் ராஜாவுக்குப் பிடித்து இரவு என் படுக்கை அறைக்கு வந்து என் போர்வையைத் திருடினால், அவர்களை இதுவரை செய்த எல்லாக் குற்றங்களில் இருந்தும் விடுவிக்கிறேன் என்றார்.

அன்று இரவு, ராஜா அவர்களை எதிர்பார்த்து காத்திருந்தார். அவர் கையில் துப்பாக்கியும் இருந்தது. நள்ளிரவு தாண்டிய நேரத்தில் மிக்கு வந்தான். தன்னைப் போல உடை அணிவிக்கப்பட்ட ஒரு பொம்மையையும் அவன் எடுத்து வந்தான். அந்தப் பொம்மையை ராஜாவின் படுக்கை அறை ஜன்னலுக்கு வெளியே கட்டித் தொங்கவிட்டான். ஜன்னலில் தெரிவதுதான் மிக்கு என்று நினைத்த ராஜா, அந்தப் பொம்மையை மீண்டும் மீண்டும் சுட்டார்.

பிறகு, வீழ்ந்த உடலைப் பார்க்கலாம் என்று வெளியே ஓடினார். அந்த நேரத்தில் குக்கு ராஜாவின் படுக்கை அறையில் நுழைந்து போர்வையை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான்.

அவர்களது திறமையை



இருந்தது. உடனே ஏற்பாடு செய்தார். விரைவிலேயே குக்குவும், மிக்குவும் கஜானாவைக் கொள்ளை அடிக்க வந்தார்கள். முதலில் குக்குதான் படியில் கால்வைத்து கொதி நீரில் விழப்பார்த்தான். மிக்கு நண்பனைக் காப்பாற்றிவிட்டான். மறுநாள், தங்கள் திட்டம் தோல்வி அடைந்ததை எண்ணி ராஜாவும், ஸ்னேரும் திகைத்துப் போனார்கள். பிறகு ராஜா நாடு முழுவதும் விளம்பரம் செய்தார். இன்று எண்ணி வியந்த அரசர், அவர்கள் சரண் அடைந்தால் பொதுமன்னிப்பு அளிப்பதாகவும் தங்கள் திறமையை நல்ல விதமாகப் பயன்படுத்தும் வகையில் அரண்மனையில் வேலை தருவதாகவும் அறிவித்தார்.

குக்குவும் மிக்குவும் சரண் அடைந்தார்கள். அரண்மனையில் மந்திரிகளாக இருந்து நாட்டின் உயர்வுக்கு தங்கள் அறிவைப் பயன்படுத்தினார்கள்.

முற்றும்.




- 1295 - இங்கிலாந்துக்கு எதிராக ஸ்கொட்லாந்தும் பிரான்சும் கூட்டை உருவாக்கின.
- 1594 -போர்த்துக்கீசப் படைகள் பெதுரோ லோப்பெசு டெ சொய்சா தலைமையில் கண்டி இராச்சியம் மீது திடீர்த் தாக்குதலை ஆரப்பித்துத் தோல்வியடைந்தனர்
- 1610 - நியூபவுண்ட்லாந்து தீவை நோக்கிய தனது பயணத்தை ஜோன் கை பிறிஸ்டலிலிருந்து 39 குடியேறிகளுடன் கடற்பயணத்தை ஆரம்பித்தார்.
- 1687 - ஐசாக் நியூட்டன் தனது புகழ்பெற்ற பிரின்சிப்பியா மாத்தமாட்டிக்கா நூலை வெளியிட்டார்.
- 1770 - ரஷ்யப் பேரரசுக்கும் ஒட்டோமான் பேரரசுக்கும் இடையில் செஸ்மா என்ற இடத்தில் போர் இடம்பெற்றது.
- 1811 - வெனிசுவேலா ஸ்பெயினிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1830 - பிரான்ஸ் அல்ஜீரியாவினுள் நுழைந்தது.
- 1865 - இரட்சணிய சேனை இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1884 - ஜேர்மனி கமரூனை ஆக்கிரமித்தது.
- 1900 - ஆஸ்திரேலியப் பொதுநலவாய சட்டம் பிரித்தானிய நாடாளுமன்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சின் விடுதலை அறிவிக்கப்பட்டது.
- 1950 - கொரியப் போர்: அமெரிக்கப் படைகளுக்கும் வடகொரியாப் படைகளுக்கும் இடையில் முதலாவது மோதல் ஆரம்பமானது.
- 1950 - சியோனிசம்: யூதர்கள் அனைவரும் இஸ்ரேலில் குடியேற அனுமதி அளிக்கும் சட்டம் இஸ்ரேலில் கொண்டுவரப்பட்டது.
- 1951 - சந்தி திரான்சிஸ்டரை வில்லியம் ஷொக்லி கண்டுபிடித்தார்.
- 1954 - பிபிசி தன் முதல் தொலைக்காட்சிச் செய்தியை ஒளிபரப்பியது.
- 1954 - ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் நிறுவப்பட்டது.
- 1962 - பிரான்சிடமிருந்து அல்ஜீரியா விடுதலை அடைந்தது.
- 1971 - ஐக்கிய அமெரிக்காவில் வாக்களிக்கும் வயது எலலை 21 இலிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது.
- 1975 - போர்த்துக்கல்லிடமிருந்து கேப் வேர்ட் விடுதலை பெற்றது.
- 1977 - பாகிஸ்தானில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமர் சுல்பிக்கார் அலி பூட்டோ பதவி இழந்தார்.
- 1987 - விடுதலைப் புலிகளின் முதல் கரும்புலித் தாக்குதல் மில்லரினால் யாழ்ப்பாணம், நெல்லியடி இராணுவ முகாம் மீது நடத்தப்பட்டது.
- 1996 - குளோனிங் முறையில் முதலாவது பாலூட்டி, டோலி என்ற ஆடு ஸ்கொட்லாந்தில் பிறந்தது.
- 1998 - செவ்வாய்க் கோளுக்கு தனது முதலாவது விண்கலத்தை ஜப்பான் ஏவியது.
- 2004 - இந்தோனீசியாவில் முதலாவது ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது.
- 2006 - வடகொரியா குறைந்தது இரண்டு குறுகிய தூரம் பாயும் ஏவுகணைகளையும், ஒரு ஸ்கட ஏவுகணையையும் ஒரு நீண்டதூரம் பாயும் ஏவுகணையையும் சோதித்தது.
- 2009 - சீனாவின் சிஞ்சியாங் மாகாணத் தலைநகர் உருமுச்சியில் கலவரங்கள் வெடித்தன.
- 2009 -றொஜர் பெடரர் விம்பிள்டன் டென்னிசுத் தொடரில் ஆண்டி ரோடிக்கை வென்று 15ஆவது பெருவெற்றித் தொடரைப் பெற்ற் சாதனை புரிந்தார்.

**பிறப்புகள்**

- 1653 - தாமஸ் பிட், மதராசின் பிரித்தானிய ஆளுநர் (இ. 1726)
- 1904 - எர்ணஸ்ட் மாயர், அமெரிக்க உயிரியலாளர் (இ. 2005)
- 1918 - கே. கருணாகரன், இந்திய அரசியல்வாதி (இ. 2010)
- 1958 - பில் வாட்டர்சன், அமெரிக்கக் கேலிச்சித்திரக் காரர்

**இறப்புகள்**

- 1833 -யோசெப் நிசிபோர் நியெப்சு, பிரெஞ்சுக் கண்டுபிடிப்பாளர் (பி. 1765)
- 1987 - கப்டன் மில்லர், விடுதலைப் புலிகளின் முதல் கரும்புலி (பி. 1966)
- 2006 -திருநல்லூர் கருணாகரன், இந்தியக் கவிஞர் (பி. 1924)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



89

என் தமிழாசானே!

வைகை ஆற்றங்கரையில் பிறந்தவனைத் தமிழ் ஆற்றங்கரைக்கு ஆற்றுப்படுத்திய பெருமகனே!

நான் இரண்டுமுறை பெற்றெடுக்கப்பட்டேன்.

1953 இல் ஒருமுறை; 1963 இல் மறுமுறை.

53 இல் நேர்ந்தது என் உடலுக்கான பிறப்பு;

63 இல் நேர்ந்தது என் உணர்வுக்கான பிறப்பு.

என் முதற்பிறப்புக்குத் தாய் தந்தை என்ற சம்பிரதாயங்கள் தேவைப்பட்டன.

என் இரண்டாம் பிறப்புக்கு நீயே தந்தையானவன்; நீயே தாயுமானவன்.

எனது பத்தாவது வயதின் ஓர் அதிகாலையில் திடீரென்று கண்விழித்தபோது என்னை நான் கவிஞனென்று கண்டுகொண்டேன்.

தாரா சங்கர் பந்த்யோபாத்யா எழுதிய கவியில் வரும் கதாநாயகனைப் போல மிரள மிரள விழித்தேன்.

ஒரு பனை மரம் கிளை விட்டது மாதிரி என்னை நானே வித்தியாசமாய்ப் பார்த்தேன்.

என் முகத்துக்கு முன்னாலும் முதுகுக்குப் பின்னாலும் விரிந்து கிடந்த வாழ்க்கைகளைத் திகைத்தும் திரும்பியும் பார்த்தபோது எனக்கு நானே அதிசயமானேன்.

விவசாயக் குடும்பம்- மண்ணை நேசிக்கும் மனிதர்கள்- வானம் பார்த்த பூமி- இந்திய தேசப்படத்தின் தெற்கைப் போல் இளைத்திருந்த இறவை மாடுகள்- கம்பளியோடு பிறந்த செம்மறியாடுகள்- தேய்ந்த கலப்பை- மழுங்கிய மண்வெட்டி- எங்கள் கிராமத்துப் பெருசுகளின் மீசை போன்ற அரிவாள்- சோளக்கூழ்; சுட்ட மிளகாய்- தண்டட்டி ஆட ஆட வெற்றிலை எச்சில் துப்பும் காது வளர்த்த கனங்குழை மாதர்கள்- சட்டென்று கோபம் கொண்டு சட்டென்று கண்ணீர் சிந்தும் உணர்ச்சிமயமான சுற்றம்- எழுத்தறிவில்லாத தாத்தாவின் இதிகாச உதாரணங்கள்- பழைய நம்பிக்கைகள்; மரபுகள்- அதிகபட்சம் ஐம்பது மைல்களுக்கு மேல் குடும்பத்தில் யாரும் பயணப்பட்டிராத வாழ்க்கை...




இப்படிப்பட்ட ஒரு கலாசாரப் பின்னணியில் பிறந்து வளர்ந்த என்னை, தமிழை நோக்கி வா வா என்று எனது பத்தாவது வயதில் உங்கள் பதாகை அசைந்தது பிதாமகனே!

என்னைக் குரல் கொடுத்து எழுதச் சொன்னது இயற்கை; விரல் பிடித்து எழுத வைத்தவர் நீங்கள்.

என் ஆசானே!

அந்த நன்றிதான் என் பேனாவில் வற்றாத மையாகவும் என் நாளங்களில் வடியாத ரத்தமாகவும் நிரம்பியிருந்தது.

இலந்தை முட்களின் அடியில் கூடு கட்டியிருந்த இந்தக் குயில் குஞ்சுக்கு, திசைகளையும் நந்தவனங்களையும் அறிமுகப்படுத்தி வைத்ததே உங்கள் எழுதுகோல் என்னும் சுட்டுவிரல்தான்.

தாயின் முலைச்சூட்டில் கண்ணயரும் குழந்தை மாதிரி உங்கள் தமிழின் கதகதப்பான வெப்பத்தில் நான் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் அடைகாக்கப்பட்டேன்.

உங்களுக்கும் எனக்கும் இருபத்தொன்பது வருட வித்தியாசம்.

1953 ஜூலை 12 இல் கல்லக்குடிப் போராட்டத்திற்கு உங்கள் தங்கத் தாய் அஞ்சுகத்தமாளிடம் நீங்கள் விடைகொண்டுபோன அதே நாளின் பின்னிரவில் என் தாய் அங்கம்மாவின் கர்ப்பப்பையிலிருந்து விடைகொண்டு நான் வெளியே வருகிறேன்.

நீங்கள் புகழின் சிகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த காலகட்டத்தில்-

உங்கள் பராசக்தி வசனங்கள் தமிழ்நாட்டுக் காற்றில் கந்தகத்தையும் மகரந்தத்தையும் கலந்துகொண்டிந்த காலகட்டத்தில்- விழுப்புண்கள் என்னும் கழற்ற முடியாத விருதுகளை- உங்கள் மார்புக்கு நீங்கள் அணிந்து பார்க்க ஆசைப்பட்ட போராட்டப் பொழுதுகளில்-

இன- மொழி உணர்வுகள் என்னும் இரண்டு ஆயுதங்கள் ஏந்தி அசுர வேகத்தில் நீங்கள் ஆரோணித்த வேளையில்- *(தொடரும்)*

**-வைரமுத்து-**

# உங்கள் பிறந்த எண் 05 இல் கூட்டெண் 02 இன் பலன்கள்



30

### தோற்றம்

புதனுடன் சந்திரன் இணைந்து தரும் ஆதிக்கப் பலன். சராசரி உயரமுடன் குட்டையாகவே தெரிவர். சிவப்பாக, மிக அழகாக, கவர்ச்சியுடன் இருப்பர். நெற்றி நிலாபோல துப்புரவாக இருக்கும். பற்கள் முத்துக்களாக வரிசையாக இருக்கும். பெரிய காந்தக் கண்கள் ஒளியுடன் இருக்கும். கேசம் அடர்த்தியாக இருக்கும். நல்ல அழகான புருவங்கள் நீண்டு வளைந்திருக்கும். கன்னங்கள் பருத்து தாடை சதைத் திரட்சியுடன் இருக்கும். கள்ளங் கபடமற்ற தோற்றத்துடன் குழந்தை போல இருப்பர்.

### குணம்

கற்பனை வளமும் அறிவும், சுறுசுறுப்பும் சேர்ந்தமைந்தவர்கள் இவர்கள். வாக்கு வன்மை, நகைச்சுவையுணர்வு, உலகாயுத உலக அறிவும் உலகம் தழுவிய மனித நேயமும் உள்ளவர். தனிமனித வாழ்வில் அச்சமும், பொதுவாழ்வில், எழுத்தில் துணிவும் உள்ளவர். உடல் செயலாற்றல் மிகுந்திருக்கும். மனம் ஒன்றைப் பல கோணங்களில் பார்க்கும். தர்க்க முறையிலான அறிவும் இருக்கும். மனம் இருவகை உணவுர்களில் எதிரெதிர்த் திசையில் ஊசலாடும். மகிழ்ச்சியை விடமாட்டார். தன்னம்பிக்கை, மன உறுதியை விடமாட்டார். ஆனால் ஊக்கமும் மனத் தளர்ச்சியும் மாறி மாறி அமையும். அறிவு ஒன்றைத் தடுக்கும். மனம் ஒன்றைச் சேர முனையும்.

மிக்க கவனத்துடன் நடப்பர். பிறரை எளிதில் நம்பிவிடமாட்டார். வேலைகளை உடனுக்குடன் செய்துமுடிக்க டென்ஷன் அடைவார். கெட்ட பெயரெடுக்கப் பயப்பட்டு நல்ல பெயர் பெற முயற்சிப்பார். கௌரவமானவர். ஆனால், மனம், சில சுகங்களை நாடும். அவ்வப்போது சுகம் தேடும். கெட்ட பழக்கங்களைக் கொண்டிருப்பர்.

காரிய வெற்றியே இவர்களுக்கு டொனிக். இவர்கள் கணித்துக் கூறும் முடிவுகள் சரியாகவே இருக்கும். சாத்திரங்களை அறிவார். நிறையப் படிக்கும் பழக்கம் இருக்கும். நாடகம், இசை, கதை, சினிமா, அரசியல் விருப்பம் இருக்கும். பண ஆசை இவர்களுக்கு அதிகம் இருக்காது. அச்சமானாலும் துக்கமானாலும் பகிரங்கம் செய்துவிடுவர்.

கொஞ்சம் பெண்மை இவர் பழக்கத்தில் தெரியும். நவீனக் கருத்துக்களை மக்களிடையே தம் எழுத்தால் பரப்பிவிடுவர். கவிதை எழுத வரும். ஆன்மிகமும் இவரைக் கவரும். மக்கள் செல்வாக்கு இருக்கும். இவருக்கென ஓரிடத்தை உலகில் பெற்றிடுவார். விரோதிகளைச் சம்பாதித்துக் கொள்வார். அதிகம் பயணம் செய்வார்.

பரபரப்பாகவே தென்படுவார். தம் வெற்றி தம் திறமையால்தான் என்ற பெருமை இவருக்கு உண்டு. அதை வெளிக்காட்டிக்கொள்ளமாட்டார். வீடு, அலுவலகம் அழகாக இருக்க வேண்டும் என விரும்புவார்.

### குடும்பம்

இவர்களுக்கு இளம் வயதிலேயே அதிர்ஷ்டம் அடிக்கும். கொஞ்சமாவது பூர்விகச் சொத்து இருக்கும். ஆனால், படித்துப் பட்டம் பெற்றுவிடும் இவர்கள் நன்றாகச் சம்பாதித்து விடுவர். மனைவி நல்லவளாக, பெற்றோரால் பார்த்து மணம் முடிக்கப்பட்டவளாக வருவாள். இருந்தாலும் இவர்கள் சபலத்திற்கு உட்படுவர். அதனால் சில தொல்லைகள் ஏற்படும். தம் தோல்விக்கும் துயரத்திற்கும் கூட குடும்பத்தாரைப் பொறுப்பாக்குவார். நண்பர்களிடமும் அடிக்கடி சச்சரவிடுவார். எளிதில் எதிலும் இவர்கள் மன நிறைவே அடையமாட்டார். இவர்களுக்குப் பிறக்கும் வாரிசு மிகவும் புத்திசாலியாக இருப்பர்.

### தொழில்

வக்கீல், நாடக ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், பதிப்பக முதலாளி எனப் பல முகங்களில் பிரபலமாகிப் புகழ் பெறக் கூடியவர்களே இவர்கள். ஏனெனில், புத்தகம் படிக்கும் பழக்கமும் நுண்ணறிவும் இவர்களுக்கு இருப்பதுடன் கற்பனைச் சக்தியும் இருப்பவராவர். மேடையிலும் பேசுவர். தொலைக்காட்சி, வானொலியில் எல்லாம் பங்குபெறுவர். நிறையச் சம்பாதிப்பர்.

டாக்டராகவும் சட்ட வல்லுநராகவும் புகழ் பெறுவர். டிசைனராக, கார்ட்டூனிஸ்டாக, ஜோதிடராகப் புகழ்பெறுவர். யாத்திரை, டிராவல்ஸ் நடத்துபவராக இருப்பர். தகவல் தொடர்பு சாதனத் தொடர்பான தொழில்களிலும் விளங்குவர். அரசாங்கம் இன்னொரு நாட்டிற்கு அனுப்பும் தூதராக இருப்பர். ஏஜெண்டுகளாக இருப்பர். நிதி நிறுவனங்களில் வேலை பார்ப்பவராகவும் இருப்பர். சொந்தத் தொழிலுக்கு முதலுடன் கூட்டாளி அமைவர்.

விவசாயப் பண்ணை, மூலிகை மருத்துவர், நவீன முறையில் ஆடை உருவாக்குவோர், ரெடிமேட் ஆடை விற்போர், தங்கும் விடுதி நடத்துவோர், காண்ட்ராக்டர்கள் என்றும் பணி புரிவர்.

### நோய்

நீர் தொடர்பான நோய் உண்டாகும். ஆஸ்துமா, சளித்தொல்லை, வயிற்றுப் பிரச்சினை, நரம்புத் தளர்வு, இலேசான மனக் கோளாறு உண்டாகலாம். இதயமும் பாதிக்கலாம். புற்று நோய்க்கு வாய்ப்பும் உண்டு.

*(தொடரும்)*

**-கணித்தவர்-ஸ்வாமி-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவோருக்கு தேசிய அடையாள அட்டை கட்டாயம்

## சுகாதார அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு



**(கொழும்பு)**

**இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் நம்முடைய அரச வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு இலவசமாக பெரிய சத்திர சிகிச்சைகளைக் கூட முடித்துச் செல்கின்றனர். இலவச சுகாதார சேவை இலங்கைப் பிரஜைகளுக்கு மட்டுமே உள்ளது என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

எமது அரச வைத்தியசாலைகளில் அனுமதி பெறும் நோயாளர்கள் தாம் இலங்கை பிரஜை என்பதை உறுதிப் படுத்தும் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டை அல்லது அதற்கு சமமான ஆள் டையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணத்தை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டுமென சுகாதார பணிப்பாளருக்கும், பணிப்பாளர் நாயகத்துக்கும் உத்தரவிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நுவரெலியா பெரியாஸ்பத்திரியில் 5 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வாட்டு தொகுதியை அமைச்சர் திறந்து வைத்து உரையாற்றும்போதே இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த இரண்டு வருடங்களாக அயல்நாடுகளிலிருந்து வருவோர் எமது அரச வைத்திய சாலைகளில் அனுமதி பெற்று பெரிய சத்திர சிகிச்சைகளைக் கூட இலவசமாகச் செய்வதுடன். நோயைக் குணப்படுத்திக் கொண்டு நாடு திரும்புகின்றனர். இவ்வாறு செயற்பட்டவர்களின் பெயர்களும் எம்மிடம் உண்டு.

இவர்களின் நிறம் ஒன்றே. மேல்நாட்டு வெள்ளை துரை ஒருவர் வந்தால் அடையாளம் காணலாம். ஆனால் எமது வலயத்தின் நட்புறவு நாடுகளின் உள்ளோர் நம்மைப் போன்றவர்களே. இது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எமது இலவச சுகாதார சேவையின் முக்கியத்துவத்தையும் பெறுமானத்தையும் வெளிநாட்டவர்கள் நன்கு அறிந்துள்ளனர்.

இந்தியா, மாலைதீவு, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து எமது நாட்டின் தனியார் வைத்தியசாலைகளுக்கு வந்து அநேகர் சிகிச்சை பெறுகின்றனர். தமது நாட்டைவிட குறைந்த செலவில் சிறந்த தனியார் துறை சுகாதார சேவையை பெறும் வசதியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# முஸ்லிம் மக்களை பாதுகாருங்கள்

## பான் கீ மூன் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் முஸ்லிம்களை பாதுகாக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

நாட்டின் சிறுபான்மை சமூகங்களில் ஒன்றான முஸ்லிம் சமூகத்தை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுவதனை தடுதது நிறுத்த அரசாங்கம் தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் தென் பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்கு முறைகள் குறித்து பொதுச் செயலாளர் கவனம் செலுத்தி வருவதாக, அவரது பேச்சாளர் ஸ்டிபென் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து இலங்கை அரசாங்கம் விரிவான விசாரணை நடத்தி எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு வட அமெரிக்காவிற்கான இலங்கை முஸ்லிம் பேரவை, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரிடம் கோரியுள்ளது. (அ-2)

# அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு!

அனுமதியின்றி சட்ட விரோதமான முறையில் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் பிரவேசித்த மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்கு உள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த மோட்டார் சைக்கிள் மோட்டார் கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையின் பேலியகொட பிரதேசத்தில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பேலியகொட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# அமெரிக்காவின் பிரஜைகள் திட்டம் குறித்து அரசாங்கம் விளக்கம் கோரும்

அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே சிசனை அழைத்து தமது எதிர்ப்பை தெரிவிக்குமாறு அமைச்சரவை வெளியுறவு அமைச்சுக்கு பணித்துள்ளது.

அமெரிக்கத் தூதுவரை அழைத்து இலங்கை அரசாங்கம் விளக்கம் கோர உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து அமெரிக்கா மேற்கொள்ளவுள்ள செயற்றிட்டமொன்றுக்கு உத்தியோகபூர்வ எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் இவ்வாறு தூதுவர் அழைக்கப்பட உள்ளார். பிரஜைகள் திட்டமொன்று முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் இதற்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவித்து அமெரிக்கத் தூதரகம் இலங்கைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ளது.

அமெரிக்கத் தூதர கத்தின் இந்த நடவடிக்கைக்கு அரசாங்கம் எதிர்ப்பை வெளியிட உளளது.

அமெரிக்கத் தூதரகத்தின் நடவடிக்கைகள் குறித்து அமைச்சரவைக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. அமெரிக்கா கண்மூடித் தனமாக உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளுக்கு உத்தியோகபூர்வமாக வெளிவிவகார அமைச்சு எதிர்ப்பை வெளியிட வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பும் நோக்கில் அமெரிக்கத் தூதுவரை சந்திக்க ஏற்கனவே திகதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மைக் கால மாக, அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல் உறவுகளில் தொடர்ச்சியாக முரண்பாடுகள் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# இலங்கையில் வன்முறை; குழப்பத்தில் இந்தியா

(கொழும்பு)

நாட்டில் அண்மையில் இடம் பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை அரசாங்கம் உடனடியாக நிறுத்த முயற்சிக்க வேண்டும். இல்லையேல் வெளிநாட்டு சக்திகள் தமது பயங்கரவாத தாக்குதல்களை தென்னிந்தியாவின் மீதும் மேற்கொள்ளக்கூடும் என்று இந்திய அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே இந்த விடயம் குறித்து இந்தியா, இலங்கையுடன் பேச்சு நடத்தவுள்ளதாக இந்திய செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

நாட்டின் அண்மைக்கால வன்முறைகளுக்கு வெளிநாட்டு பின்னணி இருப்பதாக அண்மையில் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதனை கோடிட்டுள்ள இந்திய தரப்பு, லஷ்கர்-இ-தொய்பா அமைப்பு குறித்த வன்முறைகளுக்கு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன் இதனை அந்த அமைப்பின் தலைவர் சயீட் இந்தியாவிலும் செயற்படுத்த முயற்சிக்கலாம் என்று எச்சரித்துள்ளது.

எனவே இலங்கை, பாகிஸ்தானுடனான உறவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்திய தரப்பு இலங்கையிடம் வலியுறுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட நிலையில் இஸ்லாமிய தீவிரவாதம் நாட்டை சேதப்படுத்தும் என்றும் இந்திய தரப்பு சுட்டிக்காட்டவுள்ளது.

இந்த சந்தேகத்தை இந்தியா வெறுமனே கற்பனையில் வெளியிடவில்லை. அண்மையில் தென்னிந்தியாவில் கைது செய்யப்பட்ட மொஹமட் சாகீர் ஹுசைனிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் பின்னரே இந்த சந்தேகத்தை வெளியிடுவதாக இந்திய தரப்பு குறிப்பிட்டுள்ளது. (அ-2)




யாழ்.மாவட்ட சாரணிய சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சாரணர்களுக்கான செயற்றிறன் விருத்தி 3 நாட்கள் செயலமர்வு கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இதன் ஆரம்ப நிகழ்வாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியினால் ஆளுநர் உதவிச் செயலாளர் ஜே.எச். செல்வநாயகத்திற்கு நினைவுச்சின்னம் வழங்கப்படுவதையும் கலந்து கொண்ட சாரணியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கிணைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -8

## மகரந்த சேர்க்கை தொழில்நுட்பம்: உயிரினங்களைப் பாதுகாத்தலும் பயன்படுத்தலும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-VIII

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பயிர்ச்செய்கையில் அதிகூடிய விளைச்சலைப் பெற மகரந்த சேர்க்கை முக்கியமானது. இதில் மகரந்த சேர்க்கையாளர்களுக்கு தேவையான வசதிவாய்ப்புக்களை செய்து கொடுத்தலும் மகரந்த சேர்க்கையில் தங்கியிருக்கும் தாவரங்களுக்கு ஆதரவளிக்கும் பயன்தரு திட்டமாக இதனைப்பார்க்கலாம்.

பல்வேறுபட்ட செய்கையினால் நாம் மகரந்த சேர்க்கையில் ஈடுபடும் பூச்சிகளை, பறவைகளை எமது விளைநிலத்திலிருந்து விரட்டி விட்டுள்ளோம். குறிப்பிட்ட அயன் மகரந்த சேர்க்கையினை கொணட தாவரங்களின் இனப்பெருக்கத்திற்கு மகரந்த சேர்க்கையாளர்களின் பிரசனனம் முக்கியமானது. வெறுமனே பீடைநாசினிகளை விசிறி அதுவும் காலையில் வீசுவதனால் அதிகாலையில் பூக்களை நோக்கி வரும் மகரந்த சேர்க்கையாளர்களை விரட்டவும் மேலும் அவற்றை அழிக்கவும் தலைப்பட்டுள்ளோம்.

மகரந்த சேர்க்கை தொழிலநுட்பம் ஒன்றும் புதியதல்ல. ஆனால அதனது பயன்பாட்டை பலவாறாக விரிவுபடுத்த வழிவகைகளை கண்டிருக்கிறோம். அதனடிப்படையில் மகரந்த சேர்க்கையில் ஈடுபடும் தாவரங்களை இனங்கண்டு அவற்றை வளர்ப்பதற்கு முயற்சிக்கின்றோம்.

எமது பிரதேசத்தில் மகரந்த சேர்கையினால் உயிர்வாழ்கின்ற தாவரங்களுண்டு. அவற்றின் வினைத்திறனை அதிகரித்து அதிலிருந்த பெறுபேறுகளை அதி கரிக்க வேண்டியுமிருக்கின்றது.

நீண்ட யுத்தத்தின் பின்னரான காலத்தில் சுற்றுச்சூழலை நாம் பாதுகாக்க பலமுனைப்புக்களிலும் செயற்பட ஆரம்பித்திருக்கின்றோம.

பார்த்தீனியத்தை முற்று முழுதாக அழித்து விட எடுத்துள்ள முயற்சி பாராட்டத்தக்கதாயினும் மக்கள் இன்னும் இத்திட்டங்களின் நன்மையினை உணர்ந்து அவரவர் பகுதிகளிலுள்ள பார்த்தீனியங்களை தாமாகவே அழித்துவிட வேண்டும்.

இது ஒவ்வொருவரினதும் கடமையாகும். ஒரு பக்கத்தில் பார்த்தீனிய களையகற்றல் களை கட்டினாலும் மறுபக்கத்தில் சுற்றுச் சூழலை பாதுகாக்கின்ற கடமைக்குள் நாம் உள்ளார்ந்திருக்கின்றோம் என்பதை மறக்கலா காது.

எமது சூழலை பாதுகாக்கின்ற வழி முறைகளைத் தேடிக்கொண்டிருக்கும் இந்நிலையில் சூழலிலுள்ள



கண்டங்கத்தரிக்கு வந்த தேன்

வளங்களை சிறப்பாக பயன்படுத்தவும் நாம் முயற்சிக்க வேண்டும்.

இந்த வளங்களுள் இயற்கையின் வளமாக உள்ளவை தான் எமது சூழல்தொகுதியில் உள்ள நன்மை தரும் உயிரினங்கள்.

இவ்வாறான உயிரினத்தொகுதிகளில் முதன்மையானவையாக மகரந்த சேர்க்கையாளர்களைக் குறிப்பிடலாம்.

உலகின் பயிர்ச்செய்கையில் அயன மகரந்த சேர்க்கையின்றி உணவு உற்பத்தி சாத்தியமாகாது. அயன்மகரந்த சேர்க்கையை ஊக்குவிப்பதற்காக தாவரங்களிலும் பல இசைவாக்கங்கள் உண்டு.

தாவரத்தில் தேன்சுரப்பானது மகரந்த சேர்க்கையாளர்களை கவரச் செய்வதற்கும் மகரந்த மணிகள உணவாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக தேனீக்கள் மகரந்த செய்கைக்கான சிறப்புரிமையை கொண்டிருந்தாலும் அதனை சிறப்பாகவே தன்னலங்கருதாது செய்யும் வல்லமையுடையவை.

தேனீக்களில் அதன் உடலமைப்பு பூக்களிலிருந்து தேன் சுரப்பை சேகரிக்கவும், மகரந்த மணிகளை தமது கால்களில் பந்துகளாக சேசரித்து தமது கூட்டில் கொண்டு சென்று புதிதாக உருவாகும் தேனீக்களுக்கான உணவாகவும் சேமித்துக் கொள்ளும். இவ்வளவு பொறுப்புடைய தேனீக்களின் வாழ்க்கையுடன் சுயநலத்துடன் திரியும் எம்மவர்களை எந்த விதத்திலும் ஒத்துப்பார்க்கவே முடியாது.

தேனீக்களின் வருகையை எதிர்பார்த்து பூக்கள் அதிகாலையில் விரிவதும் தேனீக்களுக்கு விருந்தளித்து தமது மகரந்த சேர்க்கையனையும் செய்வித்துக் கொள்ளும்.

குறிப்பாக பூச்சிகளால் மகரந்த சேர்க்கை நடைபெறும் பூக்களிலிருந்து பூச்சிகளின் வருகை இல்லாதுவிட்டால் அதில் காய்பிடிக்காது. இருபக்கமும் தேவையுள்ளதான இந்த செயன்முறையில் இடையில் நாங்கள் உட்புகுந்து சேமித்து வைக்கும் தேனை நாம் முகர்ந்து விடுகின்றோம்.

தேனீக்களைப் பொறுத்தவரையில் இது அவர்களுக்கு நாம் செய்யும் துரோகம். இதற்கும் மேலாக் சேகரிக்கப்பட்ட தேனை இளைய தேனீக்களுக்கு இல்லாது எமது தேவைக்கு பயன்படுத்துகின்றோம்.

பயிர்ச்செய்கையின் முன்னேற்றத்தில் மகரந்த சேர்க்கையின் பங்களிப்பு அளப்பரியது.

இங்கே மகரந்த சேர்க்கையில் தேனீக்களுடன் ஏனைய பூச்சிகளான வண்டுகள், வண்ணத்துப் பூச்சி, சிறிய வெளவால், குளவிகள், என்பன உள்ளடங்குகின்றன. இவ்வாறான பூச்சிகளை அழிய விடாது பாதுகாக்கும் நடவடிக்கைகளை உலகம்முழுவதிலும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இலங்கையில் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் ஒரு பிரிவான உயிர் பல்வகைமை அலகு மகரந்த சேர்க்கையாளர்களை பாதுகாக்க முனைப்புடன் திட்டங்களை அமுலாக்கி வருகின்றது.

இதில் முதலில் மகரந்த சேர்க்கை பற்றிய ஆய்வில் ஈடுபடும் ஆய்வாளர்களை ஒன்றிணைத்து இத்திட்டங்களின் செயலாக்கம் பற்றி கலந்தாலோசிக்கப்படுகின்றது.

வாழ்வாதார திட்டத்தில் மக்களுக்கான வருவாய்பற்றிய தேவை களை கருத்தில் கொண்டு தேனீ வளர்ப்பை தொழில்முயற்சியாக மேலும் விரிவாக்க திட்டமிடப் படுகின்றது.

ஆனால் மக்களுக்கு மேலும் தேனீ வளர்ப்பு பற்றிய அறிவூட்டல் பரவலாக வழங்கப்படவேண்டும்.

மகரந்த செய்கை என்பது தேனீ வளர்ப்பின் ஒரு முக்கிய அம்சமாகும்.

அதற்கான தாவரங்களை தேடி எமது வீட்டுத்தோட்டத்தில் வளர்க்கலாம். வீட்டுத்தோட்டத்தினுள் தேனீக்களைக் கவரும் பூக்கும் தாவ்ரங்களை வளர்ப்பதன் மூலம் தேனீக்களுக்கான வாழிடத்தையும நாம் உருவாக்கிக் கொடுக்கலாம்.

சாதாரணமாக விளை நிலத்தில் விசிறப்படும் பீடைநாசினிகளினால் தேனீக்கள் உள்ளிட்ட மகரந்த சேர்க்கையாளர்கள் அழிக்கப்பட்டும் விளைநிலத்தைவிட்டு துரத்தப் பட்டுமிருக்கின்றன.

இந்நிலையில் நாம் எவ்வாறான உள்ளீடுகளை பயன்படுத்தினாலும் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காது. இயற்கையாக வடிவமைத்ததை நாம் விஞ்ஞான அணுகுமுறையென்ற போர்வையில் எமக்கு சாதகமாக மாற்றியமைக்கலாம் என்றால் அதுதான் இல்லை. இயற்கையை இரசிக்க தெரிய வேண்டும் .அதே நேரத்தில் அதனை பாதுகாக்கவும் நாம் முயல வேண்டும்.

மகரந்த சேர்க்கையாளர்களை பாதுகாக்கும் மற்றும் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை மேலும் விரிவாக்கி அதனை தேனீ வளர்ப்பில் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

மேலும் இதுபற்றிய ஆய்வுகள் முடுக்கிவிடப்பட்டு இதனை தொழிற்றுறையாக பரிணமிக்க நாம் அனைவரும் பாடுபடுவோம். இது பற்றி இன்னும் அலசி ஆராய்வோம்.

# இலத்திரனியல் மனுத்தாக்கல் முறை விரைவில் அறிமுகம்

வீட்டிலிருந்தவாறு இணையத் தளத்தினூடாக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யக்கூடிய இலத்திரனியல் மனுத தாக்கல் (e.filing:) முறையொன்றை எதிர்வரும் 15 ஆம் திகதி அளவில் ஆரம்பிக்க இருப்பதாக பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார.

இதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் சட்டத்தரணிகளுக்கு தமது மடிக்கணனிகள், ஐபொட் என்பவற்றை வழக்கு விசாரணையின்போது பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்கவும் திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டார். மஹர நீதிமன்ற புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதம நீதியரசர் கூறியதாவது,

நீதிமன்றத்திற்கு வந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வழக்கு தாக்கல் செய்யவும் அதன் முன்னேற்றம் குறித்து அரிய பல தடவை நீதிமன்ற படியேறி இறங் கவும் நேரிடுகிறது.

இதனை இலகுபடுத்தும் வகையில் வீட்டிலிருந்தவாறு அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை பதிவு செய்யக்கூடிய புதிய முறையை 15 ஆம் திகதியளவில் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம்.

இணையத்தளத்தினூடாக வழக்கு தாக்கல் செய்வது மட்டுமன்றி வீட்டிலிருந்தே இணையத் தளத்தினூடாக பணம் செலுத்தவும் ஒழுங்குகள் செய்யப்படும். வழக்கின் முன்னேற்றம் குறித்து வீட்டிலிருந்தே அறியவும் மனுதாரர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இதேவேளை, சட்டத்தரணிகளுக்கு சாட்சிகளின் சாட்சியங்களை பதிவு செய்து கொள்ளவும் எதிர்காலத்தில் அவகாசம் வழங்க உள்ளோம் என்றார். (2)

## பரிசளிப்பு விழா

யா/வட்டு மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக வடமாகாண திட்டமிடல் விவசாயத்திணைக்களப் பணிப்பாளர் த.சர்வானந்தா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

நினைவுப் பேருரையை வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி றதினி காந்தநேசன் நிகழ்த்தவுள்ளார். (2)

# தமிழ் அகதிகள் படகு இடைமறிப்பு; ஐ.நா.அமைப்பு அதிருப்தியில்

அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பை தேடி சென்ற இலங்கை தமிழ் அகதிகள் கடலில் இடைமறிக்கப்பட்ட விடயம் குறித்து ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான அமையம் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவை நோக்கி சென்ற 153 இலங்கை தமிழ் அகதிகளும் இடைமறிக்கப்பட்டமை குறித்து அபோட்டின் அரசாங்கம் உறுதிபடுத்தலையோ அல்லது மறுப்பையோ வெளியிடவில்லை.

இந்நிலையில் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டார்கள் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை வீடியோ மூலம் குறித்த படகு அகதிகள் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களில் சிலர் இலங்கையிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இந்த செய்தி உறுதிப்படுத்தப்படவில்லை என்று கூறியுள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமையம், படகுகளை இடைமறிக்கும் போது சர்வதேச நியமங்கள் மற்றும் கடமைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்று எச்சரித்துள்ளது.

சாதாரணமாக பட்கு ஒன்றை இடைமறிக்கும் நாடு அந்த படகை தமது கடல் எல்லைக்குள் வைத்தே இடைமறிக்கவேண்டும் என்ற அடிப்படை அகதிகள் நியமம் உள்ளமையை அமையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை ஒரு நாட்டில் இருந்து பயம் காரணமாக வெளியேறும் ஒருவர் மீண்டும் அந்த நாட்டுக்கு பலவந்தமாக அனுப்பப்படுகின்றமை சர்வதேச சட்டத்தை மீறுகின்ற செயல் என்றும் அமையம் குறிப்பிட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.க- காங்கிரஸ் கை கோர்க்குமா?

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் முதல் முப்பது நாட்கள் ஆட்சி முடிந்து அடுத்த கட்டத்தில் காலெடித்து வைத்துள்ளது. இதுவரை வந்த இந்தியப் பிரதமர்களில் பலர் அதிக அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை அமைத்தாலும். பிரதமர் நரேந்திரமோடி தன்னுடன் 45 பேர் கொண்ட அமைச்சரவையை உருவாக்கி செயற்பட்டு வருகிறார்.

கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சர் பதவி கொடுக்க வேண்டிய நிர்பந்தம் அவருக்கு இல்லை. ஆனால். தேர்தலுக்கு முந்தைய கூட்டணியை மதிக்கும் பொருட்டு. சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம், பிரகாஷ் சிங் பாதல் தலைமையிலான அகாலி தலம், பால்தாக்கரே உருவாக்கிய சிவசேனா போன்ற முக்கியக் கட்சிகளுக்கு அமைச்சரவையில் இடம் கொடுத்து அரவணைத்துச் செல்லுகிறார் பிரதமர் மோடி.

பிரதமராகப் பதவியேற்றதும் தனக்கு பிரின்ஸிபால் செக்ரட்டரியாக நிர்பேந்த்ரா மிஸ்ராவை நியமிக்க விரும்பினார். அவர் ட்ராய் தலைவராக இருப்பவர்கள். அதன் பிறகு மத்திய மற்றும் மாநில அரசு பதவிகளை ஏற்கக் கூடாது என்று ட்ராய் சட்டம் தடுத்தது.

அதனால் அந்த சட்டத் தற்கு ஓர் அவசரச்சட்டம் கொண்டு வந்து அத்தடையை நீக்கி, நிர்பேந்த்ரா மிஸ்ராவை தனது முதன்மைச் செயலாளராக நியமித்துக் கொண்டார் நரேந்திர மோடி.

பிரதமர் தனது செயலாளரை அவசரச்சட்டம் மூலம் நியமித்தது இதுதான் முதற்தடவை. அதன் பிறகு அமைச்சர்களுக்கு நேர்முக உதவியாளர்கள் நியமிக்கும் விடயத்தில் மோடி சில முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்தார். அதாவது "உங்கள் உறவினர்கள் யாரையும் நேர்முக உதவியாளர்களாக வைத்துக் கொள்ளாதீர்கள்" என்பதுதான் அந்த உத்தரவு.

அதைத் தொடர்ந்து அரசாங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களில் ஒருவரைத்தான் நேர்முக உதவியாளராக நியமிக்க வேணடிய கட்டாயம் அமைச்சர்களுக்கு உருவானது. இதுவும் இந்திய அமைச்சர்கள் வரலாற்றில் மோடி உருவாக்கிய புதிய சகாப்தம்.

மோடி தலைமையிலான முதல அமைச்சரவைக் கூட்டமே சக அமைச்சர் கோபிநாத் முண்டேயின் திடீர் மரணத்திற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை உருவானாலும், அமைச்சரவை தன் கட்டுப்பாட்டில் இருக்கும் என்பது தெளிவாக பிரகடனப்படுத்தினார் மோடி. அதற்கு சரியான உதாரணம் அனைத்து துறை செயலாளர்களையும் அழைத்து அமைச்சர்களின்றி ஒரு ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினார்.

"செயலாளர்கள் நான் சொல்வதைததான் கேட்பார்கள். நீங்கள் என்ன. செய்தாலும் அது எனது கவனத்திற்கு வந்துவிடும்" என்று "அமைச்சர்கள் ஜாக்கிரதை" என்றுமோடி விடுத்த செய்தி இது.


இது மட்டுமின்றி, முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் நியமிக்கப்பட்ட தேவையற்ற அமைச்சரவைக் குழுக்களை எல்லாம் கலைத்தார். அதைவிட முக்கியமாக நாட்டிற்கு ஐந்தாண்டு திட்டங்களை வகுக்கும் திட்டக்கமிஷன் தேவையா? என்ற கேள்வியை எழுப்பி விவாதத்திற்கு விட்டிருக்கிறார். "மக்கள் எனக்கு வாக்களித்துள்ளார்கள். அதனால் நல்லதோ கெட்டதோ அது என் தலைமீது தான் விழும்.

ஆகவே, அரசாங்கத்தின் செயற்பாடுகள் என்தலைமையில், நான் சொன்ன திசையிலேயே நடக்கும்" என்பதை தன் கட்சியான பா.ஜ.க.விற்கு மட்டுமின்றி, அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தன் முப்பது நாள் செயற்பாட்டில் தெளிவான செய்தியை அறிவித்துவிட்டார் மோடி.

அரசு நிர்வாக முறையில் டெல்லியில் உள்ள மத்திய செயலகத்தில் குறித்த நேரத்திற்கு அனைத்து ஊழியர்கள் மட்டுமின்றி, அமைச்சர்களும் வர வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக தானே முன்கூட்டியே அலுவலகத்தில் வந்து அமர்ந்து விடுகிறார் மோடி. காலை எட்டரை மணி முதலே மத்திய அரசு அலுவலகங்கள் இயங்கத் தொடங்கிவிடுகின்றன. இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முன்னேற்றம்.

வளர்ச்சித் திட்டங்களுக்கு இடையூறாக இருக்கும் எண்ணற்ற தேவையில்லாத சட்டங்களை நீக்குவோம் என்றும் அறிவித்து விட்டார். ஒவ்வொரு துறையும் எந்தெந்த சட்டங்களை நீக்கலாம் என்று பரிந்துரை செய்யும்படியும் கூறியிருக்கிறார்.

அதையெல்லாம் விட "கல்வி சான்றிதழ் உள்ளிட்ட ஒருவரின் பல்வேறு சான்றிதழ்களுக்கு நோட்டரி சர்டிபிகேட் வாங்க வேண்டியதில்லை" என்று அறிவித்து இருக்கிறார். "என் சான்றிதழ் சரியானது" என்று சம்பந்தப்பட்டவரே சர்டிபிகேட் கொடுக்கட்டும் என்ற "செல்ப் வெரிபிகேஷன்" முறையைக கொண்டுவர பிரதமர் நரேந்திர மோடி திட்ட மிட்டுள்ளார்.



நிர்வாக முறையில் செய்யப்பட்டுள்ள இந்த விடயங்கள் புதியவை. அரசு நிர்வாகத்தை எளிமைப்படுத்தும் வலிமை மிக்கவை. அதே நேரத்தில் அண்டை நாடுகளுடனான உறவில் புதிய ஆளுமையை ஏற்படுத்தும் விதத்தில் அடுத்தடுத்து அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் விடயத்தில்கூட முன்பெல்லாம் "கைதானவர்கள் விடுதலை ஆவதற்கு நாள் பிடிக்கும்.

ஆனால், இப்போது கைதானவர்கள் உடனுக்குடன் விடுதலை செய்யப்படுகிறார்கள்" என்று தமிழக மீன் துறை அதிகாரிகள் மத்தியிலேயே பேச்சு எழுந்திருக்கிறது.

மோடி அரசால் இலங்கை தமிழர் பிரச்சினையில் ஒரு மாற்றம் ஏற்படும் என்ற தோற்றத்தை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறது இந்த முப்பது நாள் ஆட்சி.

ஊழல் ஒழிப்பு என்பது மோடி முன்வைத்த முதல்குரல். பாராளுமன்றக் கூட்டத்தில் பேசிய மோடி, "எம்.பி.க்களின் மீதுள்ள ஊழல் வழக்குகளை ஒரு வருடத்திற்குள் விசாரித்து முடிக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

ஊழல் அரசியல்வாதிகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை இது என்றாலும், அதில் நீதிமன்றங்களின் ஒத்துழைப்பும் தேவைப்படுவதால் எந்த அளவிற்கு சாத்தியப்படப் போகிறது என்பது தெரியவில்லை.

"கறுப்புப் பணத்தை"க் கொண்டுவர சிறப்பு விசாரணைக்குழு ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஷா தலைமையில் நியமிக்கப்பட்டது. இப்படியொரு அனைத்து துறைகளும் அடங்கிய. விசாரணைக்குழு அமைக்கப்பட்டது என்றாலும், சுவிட்ஸர்லாந்தில் இருந்துகூட எந்தத் தகவலும் உடனடியாக கிடைக்காது என்று வரும் தகவல்கள் சற்று ஏமாற்றம் அளிக்கும் விதத்தில் இருக்கிறது.

"கருப்புப் பணத்தை வெளிக் கொண்டு வருவோம்" என்ற மோடியின் முழக்கத்திற்கு இது சற்று சவாலான பணிதான்.

"நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவோம்" என்பது பா.ஜ.க.வின் இன்னொரு முழக்கம்.

அதற்காகவே நிதியமைச்சர் பொறுப்பு அருண்ஜேட்லியிடம் கொடுக்கப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னர் ரகுராம் ராஜன் அது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்து வந்தாலும், அவரை மாற்ற வேண்டும் என்று பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான டாக்டர் சுப்ரமண்யம்சுவாமி கோரிக்கை வைததுள்ளார்.

"தான் நினைத்ததைச் சாதிக்காமல் விடமாட்டார்" என்ற பெயர் பெற்றவர் டாக்டர் சுப்ரமண்யம் சுவாமி, அதனால் கவர்னர் ரகுராம் ராஜன் தொடர்ந்து நீடிப்பாரா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

பிரதமர் நரேந்திரமோடி மற்றும் நிதியமைச்சர் அருண் ஜேட்லி ஆகியோர் ரிசர்வ் பாங்கின் கவர்னரை அழைத்து பேசி விட்டார்கள்.

ஆனால்அவரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் போதுதான் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பட்டியல் வெளியே வரும்.

பொருளாதார விடயங்களில் மோடியின் அரசு ஏற்படுத்தும் சாதனை மட்டுமே அது வாக்காளர்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கு அர்தத்தைக் கொடுக்கும்.

பலமான எதிர்கட்சியோ, தொல்லை கொடுக்கும் கூட்டணிக் கட்சிகளோ இல்லாத நிலையில், பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய மிகப்பெரிய சவாலுக்கு இனி வரும் பட்ஜெட்டில்தான் அறிவிப்புகள் வெளிவரும்.

அதற்கும் முன்பே ரயில் கட்டணத்தை 14 சதவீதத்திற்கும் மேல் உயர்த்தியது மோடி அரசாங்கத்திற்கு மிகப்பெரிய இமேஜ் சிக்கலை தோற்றுவித்துள்ளது.

தொடரும்

*-எம்.காசிநாதன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனம்



இலங்கையின் பல பகுதிகளிலும் பருவகால மழைக்குப் பின்னர் டெங்கு நோயின் பரவல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது. யாழ் மாவட்டத்திலும் பல பிரதேசங்களிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே, யாழ் மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான வாரம் நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். இவ் வாரத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பின்வருமாறு திட்டமிட்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.

பிரதேச செயலாளர் பிரதேச மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் கூட்டத்தை ஒழுங்கு செய்து பிரதேசத்திலுள்ள நிறுவனங்களையும், கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து நுளம்பு கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரி இதற்கு ஒருங்கிணைப்பாளராக செயற்பட வேண்டும்.

கிராம மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் குழு கூட்டத்தை கிராம சேவகர் தலைமையில் ஏற்பாடு செய்து கிராம மட்ட அமைப்புக்களை நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். பொது சுகாதார பரிசோதகர் இதற்கு ஒருங்கிணைப்பாளராக செயற்பட வேண்டும்.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் ஒவ்வொரு நாள் ஒதுக்கப்படும்.

குறித்த நாளில் குறித்த வலயத்திற்குட்பட்ட சகல நிறுவனங்களும், வைத்தியசாலைகளும், பொது இடங்களும், வணக்கத் தலங்களும், வர்த்தக நிலையங்களும், வீடுகளும், பராமரிப்பற்ற காணிகளும், நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

குறித்த நாளில், குறித்த வலயத்தில் இடம்பெறும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து ஆலோசனைகளை வழங்குவதற்கு பல குழுக்கள் வீடுகளையும், நிறுவனங்களையும், பொது இடங்களையும் தரிசிப்பர். இக் குழுக்களில் பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமூக அமைப்புக்களின் தொண்டர்கள், சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபட வேண்டும்.

இவ்வாரத்தில் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய விபரங்களையும், அதில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் விபரங்களையும் சுகாதார வைத்திய அதிகாரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக அரசாங்க அதிபருக்கும், மாகாண சுகாதார அமைச்சுகளுக்கும் தினமும் அனுப்பி வைக்க வேண்டும்.

எனவே, யாழ் மாவட்டத்தில் அனைவரும் நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது மக்களை ஆட்கொல்லி டெங்கு நோயிலிருந்து பாதுகாப்போம் என்று அரசாங்க அதிபர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

# வெளிநாட்டு பிரதிநிதிகள் பங்கேற்கும் உலக தென்னை மாநாடு கொழும்பில்

ஆசிய பசுபிக் தென்னை சமூகத்தின் 46ஆவது உலக தென்னை மாநாடு எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

20 நாடுகளைச் சேர்ந்த 157இற்கும் அதிகமான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் குறித்த மாநாடு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் ஆரம்பமாக விருப்பதாக தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தெங்கு உற்பத்திக்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரம் கிடைத்திருக்கும் நிலையில் தென்னை தொடர்பான சர்வதேச மாநாட்டை இலங்கையில் நடத்தக் கிடைத்திருப்பது நாட்டுக்குப் பெருமை சேர்த்திருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை மாநாடு நடைபெறும் அதேநேரம், தெங்கு உற்பத்தித்துறை தொடர்பான சர்வதேச கண்காட்சியும் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார். தெங்கு உற்பத்தியில் இலங்கை உலகத்தில் நான்காவது இடத்தில் உள்ளது. சர்வதேச நாடுகள் பல இலங்கையின் உதவியையும் அனுபவத்தையும் நாடியுள்ளன. இந்த நிலையில் தெங்கு உற்பத்தி தொடர்பில் ஆசிய பசுபிக் பிராந்திய தெங்கு சமூகத்தைச் சேர்ந்த நாடுகள் அனுபவங்களையும் கருத்துக்களையும் இம் மாநாட்டின் மூலம் பகிர்ந்துகொள்ளவுள்ளன.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இலங்கையின் தெங்கு உற்பத்தி வளர்ச்சி கண்டுள்ளது. கடந்த வருடத்தின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருட முதல் காலாண்டு பகுதியில் தெங்கு ஏற்றுமதி 74 வீதத்தால் அதிகரித்துள்ளது. இவ் வருடம் ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப் பகுதியில் தெங்கு ஏற்றுமதி மூலம் அரசாங்கம் 20 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டியுள்ளது.

இவ்வருட இறுதியில் இந்த எண்ணிக்கை மேலும் பன்மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (2)

# ஞானசார தேரரின் விசா அனுமதி குடிவரவு சட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படும்

## பிரித்தானியா தெரிவிப்பு

பொதுபலசேனாவின் கலகொட அத்தே ஞானசார தேரரின் விசா அனுமதி தமது நாட்டு குடிவரவு சட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும் என்று பிரித்தானியா அறிவித்துள்ளது.

ஏற்கனவே ஞானசார தேரருக்கு விசா வழங்க அமெரிக்கா மறுப்பை வெளியிட்டது.

இந்நிலையில் பிரித்தானியாவும் அவருக்கு நாட்டுக்குள் பிரவேசிக்க தடைவிதிக்குமா? என்று பிரித்தானிய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே பிரித்தானிய குற்றத்தடுப்பு மற்றும் சமூக எதிர்ப்பு செயற்பாடுகள் தொடர்பான அமைச்சர் டெய்லர் ஹெறால்பீச் பிரபு இந்த பதிலை வழங்கியுள்ளார்.

சாதாரணமாக ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகளை கொண்ட தீவிரவாதிகள் பிரித்தானியாவுக்குள் பிரவேசிக்க முடியாது.

இவ்வாறானவர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதால் அது பிரித்தானியாவுக்குள்ளும் இனங்களுக்கு இடையில் பிரச்சினைகளை உருவாக்கும் என்றும் பிரித்தானிய அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பிரித்தானியாவின் விழுமியங்களுக்கு எதிரானவர்களுக்கு விசா நீடிப்பு சலுகையையும் தாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிரித்தானிய குற்றத்தடுப்பு மற்றும் சமூக எதிர்ப்பு செயற்பாடுகள் தொடர்பான அமைச்சர் டெய்லர் ஹெறால்பீச் பிரபு குறிப்பிட்டார். (அ-2)

# இன்று ஒரு தகவல்

## சட்டமும் சட்டையும்

எனக்கு ஒரு நண்பர். அவர் ஒரு வழக்கறிஞர். ஒருநாள் அவரிடம் கதைத்துக் கொண்டிருந்தேன்.

அப்போது கேட்டேன்... "ஏன் சேர்! நீங்கள் நீதிமன்றில் வாதாடும்போது கறுப்புநிற அங்கி அணிந்து கொள்கிறீர்களே... அதற்கு என்ன காரணம்? சட்டத்திற்கும் கறுப்பு நிறத்திற்கும் என்ன தொடர்பு?" என்றேன்.

"அது ஒரு சுவாரஸ்யமான கதை" என்றேன்.

"சொல்லுங்கள் கேட்போம்" என்று சொன்னேன்.

கி.பி 1694 ஆம் ஆண்டிலே இங்கிலாந்து அரசி இரண்டாவது மேரி இறந்து போனார். அந்த ராணியின் கணவன் மூன்றாம் வில்லியம். அவர் ஒரு உத்தரவிட்டார்.

அரசியினுடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கிற வகையிலே வழக்கறிஞர் அனைவரும் கறுப்புநிற அங்கி அணிய வேண்டும் என்றார்.

அன்று ஆரம்பித்த அந்தப் பழக்கம் இன்று வரை மாறவே இல்லை.

வழக்கறிஞர்கள் முதலிலே கறுப்பு அங்கி மட்டும் தான் அணிந்தார்கள். அதிலே ஒரு சிறிய சங்கடம்.

ஏற்கனவே உடம்பு கறுப்பாக இருப்பவர்கள் அதற்கு மேலே கறுப்பு நிற உடை வேறாக அணிந்து கொண்டால், முகம் 'பளிச்' என்று தெரியாது தானே.

அதனால் முகம் பளிச்சென்று தெரிவதற்காக அவர்கள் வெள்ளை நிற பட்டியை அணிய ஆரம்பித்தார்கள்.

இப்படியாக இங்கிலாந்திலே அந்தப் பழக்கம் வழமைக்கு வந்தது.

அந்த சமயத்திலே இந்தியாவை ஆட்சி செய்தனர் பிரிட்டிஷ்காரர்கள்.

அதனாலே அங்கேயும் அந்தப் பழக்கம் நடைமுறைக்கு வந்தது.

இங்கிலாந்து நீதிமன்றம் மிகவும் மதிப்பு வாய்ந்த இடம். அந்த அளவிற்கு சட்டத்திற்கு அங்கே மதிப்பு.

இந்தக் காலத்தில் குற்றவாளிகள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டாலும் மறுகணம் அதே குற்றத்தை இழைக்கிறார்கள்.

சட்டம் ஒரு இருட்டறை. அதில் வக்கீலின் வாதம் ஒரு வெளிச்சம் என்கிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.சபையின் விசாரணை ஸ்கைப் மூலம் இடம்பெறும்

## அதை தடுக்க வருமாம் புதிய சட்டம்-அமைச்சர் ரம்புக்வெல

**(கொழும்பு)**

**இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமை பேரவையின் செயற்பாடுகள் தவறானவை என நாம் திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில் அதன் விசாரணைகளில் எமக்கு பங்காளராக முடியாது என அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

ஸகைப் மற்றும் உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சாட்சியங்களைப் பதிவுசெய்ய விசாரணைக்குழு தயாராவதாகத் தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பில் அந்த சந்தர்ப்பத்திலேயே தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது தொடர்பிலுள்ள சட்ட ஏற்பாடுகள் குறித்து ஆராயவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றது. இதில் ஐ.நா. விசாரணை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது.

ஐ.நாவில் முன்வைக்கப்பட்ட இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை என்பதை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. செயற்பாடுகளுடன் தொடர்புடைய சகல விடயங்களும் இதற்குள் அடங்கும்.

சட்டபூர்வமாக மக்களால் நியமிக்கப்பட்ட அரசாங்கத்தை பயங்கரவாதிகளுடன் சரிசமமாக கருதி விசாரணைகளை முன்னெடுக்க ஐ.நா. விசாரணைக்குழு தயாராவதை எந்த வகையிலும் ஏற்க முடியாது.

யுத்த செயற்பாட்டின் ஊடாக பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலே அவ்வாறு அழிக்கப்பட்ட அமைப்பு குறித்தும் இவர்கள் விசாரிக்கத் தயாராகிறார்கள்என்றனர். (2)

# பாதுகாப்பு விசா கோருவோருக்கு தேசத்தின் நலன் எனும் சோதனை

## அவுஸ்.குடிவரவு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிற்கு விசா இல்லாமல் சென்று, பாதுகாப்பு கோரி விண்ணபிக்கும் வெளிநாட்டவர்கள் தொடர்பான பிரச்சினை மீண்டும் நீதிமன்றத்திற்கு செல்லக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

மொரிசன் குடிவரவுச் சட்டத்தின் கீழ் அகதிகளாக நிர்ணயிக்கப்பட்டு நிரந்தர பாதுகாப்பு கோரி விண்ணப்பிக்கும் நபர்களுக்காக 'தேசத்தின் நலன்கள்' என்ற சோதனையை அறிமுகம் செய்யப் போவதாக குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் கூறியிருக்கிறார்.

சில அகதிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு விசாக்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானம் செல்லுபடியற்றதென மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்து சில நாட்களுக்குள், அதனைத் தாண்டிச் செல்லும் முறை பற்றி மொரிசன் பிரேரித்திருக்கிறார்.

புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகளுக்காக போராடும் டேவின் மாண் . மொரிசனின் நடவடிக்கை அசாதாரணமானதென வர்ணித்துள்ளார். இதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடும் சாத்தியக் கூறுகளை அவர் கோடிட்டுக் காட்டினார்.

தமது தனிப்பட்ட விருப்பத்திற்கு ஏற்ப புதிய சோதனையை பிரயோகிக்கப் போவதாக மொரிசன் தெரிவித்தார்.

இது நாடாளுமன்றத்தின் தெளிவான விருப்பத்தையும், நாட்டின் சட்டவாட்சியையும் மீறுவதாகும் என சட்டத்தரணி மாண் தெரிவித்துள்ளார்

அவுஸதிரேலிய அரசாங்கம் அகதிகளை எப்படியாவது சுய விருப்பத்தின் பேரில் நாட்டை விட்டு அனுப்புவதே குறிக்கோளாக கொண்டுள்ளது .

மொரிசனின் இத் திட்டமானது நடைமுறை சாத்தியமற்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அகதி அந்தஸ்து உறுதிப்படுத்தப்படாத பாகிஸ்தானியர்கள் நாடு கடத்தப்படுவர்

## குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அகதிகள் கோரிக்கையாளர்கள் என்பது நிரூபிக்கப்படாவிட்டால் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள 142 பாகிஸ்தானியர்களும் நாடு கடத்தப்படுவர் என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

சுற்றுலா விசா மூலம் நாட்டுக்குள் பிரவேசித்துள்ள இந்த 142 பாகிஸ்தானியர்களும் விசா சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அகமடிய எனும் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களே அதிகளவில் இவ்வாறு அகதிக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அகதிக் கோரிக்கை விண்ணப்பத்தை 142 பேரில் 6 பேருக்கு மட்டுமே அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அகதி அந்தஸ்து உறுதிப்படுத்தப்படாதவர்கள் நாடு கடத்தப்படுவார்கள்.

அகதி அந்தஸ்து உறுதியானவர கள், அவர்களை ஏற்றுக் கொளள விரும்பும் நாடுகளிடம் ஒப்படைக்கப்படுவர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அகதிகளை நாடு கடத்துவது ஆபத்தானது என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. (அ-2)

# தாய்ப்பால் புரையேறியதில் குழந்தை மரணம்

தாய்ப்பால் புரையேறியதால் ஒன்றரை மாதக்குழந்தை உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் மயில் வாகனம் ஜேசுதன் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது. சம்பவ தினமான அன்று குழந்தை அழுதவுடன் தான் தாய்ப்பாலை பருக கொடுத்ததாகவும் சிறிது நேரத்தின் பின்னர் அழுகையை நிறுத்திய குழந்தை அழாமல் இருப்பதை கண்டு பார்த்த போது குழந்தை உயிரிழந்து காணப்பட்டதாகவும் குழந்தையின் தாய் பொலிஸாருக்கு வாக்கு மூலத்தில் அறிவித்துள்ளார்.

உயிரிழந்த குழந்தை வாழைச்சேனை வைத்தியசாலையில் பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருப்பதுடன் வாழைச்சேனை பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (2)




## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று எட்டாம் திருவிழா

### தேவி நாகபூசணியே...

அலைகடலிலிருந்தருள்கின்ற தாயே!
நயினையம்பதி வாழ் நாகபூசணியே!
நாடிஉனைவரும் பக்தர்களை காத்தருள்வாய்
கோடி முறை உனை தரித்தோம்
நாகபூசணியே எம்பாவங்களைப் போக்கிடம்மா!

கிரு.செந்தூரன் (பருத்தித்துறை)

### மணி பல்லவத் தாயே பேரருள் தந்திடுவாய்

*ஏழ் கடல் சூழ் சமுத்திரத்தின் மத்தியில்*
*ஏற்றம்மிகு வீற்றிருக்கும் நாகபூசணியே!*
*பாரெங்கும் உன் புகழ் பரவி வர*
*அமுதசுரபியாய் அருள் ஞானம் தந்திடுவாய்!*
*படகேறி வருகின்றோம் உனைத் துதிப்பதற்காய்*
*எம் இடர் நீங்க வழியமைப்பாய் தாயே!*

சுப்பிரமணியம் கண்ணன்(கைதடி)

### நாக பூசணியே...

நயினையில் கோவில் கொண்டாள்
நயினை நாகபூசணி–தன்னை
நம்பி வருபவர்களுக்கு
நன்மைகளைச் செய்வாள் நாகபூசணி

அன்பர்க்கு உதவும்
அன்பு கொண்டவள் நாகபூசணி
அமிர்தம் அளிக்கும்
அமிர்த சுரபியே நாகபூசணி

சி.சிறிகரன் (யா/உரும்பிராய் சை.த.வி.)தரம் 10 பி

### அமுத சுரபியின் நாயகி போற்றி

அலைகடல் சூழ்ந்த கரைதனில் அமர்ந்த
அன்னையின் திருவடி போற்றி
அகிலமே போற்றும் நயினையின் தாயே
நாமுன் சரணம் போற்றி
அன்னதானம் அனுதினம்வாரி வழங்கும்
அமுதசுரபியின் நாயகி போற்றி

ச.லலிதாதேவி (நெடுந்தீவு)

### வேண்டுகிறேன் தாயே!

பெருமையுறு மாநாகம் குடையது பிடிக்க
பரவசமாய் எழுந்தருளும் பத்தினியே-நாகபூசணி அம்மா
பாதியுருவை பரமனுக்கே பகிர்த்தளித்த தாயே
பணிந்து உன்னை வேண்டுகிறேன் பார்த்து
இரங்க வேண்டும் அம்மா
பார் அழைக்க மழை பொழிய பண்ணி
மீண்டும் ஊர் திருந்த பத்தினியே
எம்மைக் காத்திடம்மா!

கலாபூசணம் பி.தணிகாசலம்(கற்கோவளம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் குறித்து ஆதாரங்கள் திரட்டப்படுகின்றன

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**கடந்த கால குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு தண்டனை விதிப்பதில் நாட்டமில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி தண்டனை விதிப்பதில் அரசாங்கத்திற்கு நாட்டமில்லை என ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை சமூகத்துடன் இணைப்பதே அரசாங்கத்தின் கொள்கையாக அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை தீர்மானம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும், ஜனநாயக அரசாங்கப் படையினரையும்.பயங்கரவாத அமைப்பினையும் இந்த தீர்மானம் ஒரே விதமாக நோக்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்ட ரீதியான அரசாங்கமொன்றையும் பயங்கரவாத அமைப்பு ஒன்றையும் ஒரேவிதமாக நோக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஏற்கனவே இறந்து போன ஓர் அமைப்பாகும.

எவ்வாறெனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைவதாக அண்மையில் அரசாங்கம் தகவல் வெளியிட்டிருந்தமை கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அடேல் பாலசிங்கம், கருணா அம்மான், குமரன் பத்மநாதன் போன்ற புலி உறுப்பினர்களுக்கு தண்டனை விதிக்க அரசாங்கம் ஆர்வம் காட்டவில்லையா என ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

இதன்போது முன்னாள் புலித் தலைவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைத்து கொண்டுள்ளதாக அவர் பதிலளித்துள்ளார்.

அல்பிரட் துரையப்பா கொலை முதல் கெப்பற்றிகொல்லாவ குண்டுத் தாக்குதல் வரையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி ஆதாரங்கள் திரட்டப்பட்டுள்ளதாகத் அவர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் விசாரணை நடத்துவதில் அர்த்தமில்லை எனவும், ஐக்கிய நாடுகள் விசாரணைகள் மீது நம்பிக்கை கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் விசாரணைகளின் போது இலங்கையர்களை சாட்சியமளிக்க அனுமதிப்பதா இல்லையா? என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அது குறித்து ஆராயப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆகாயத் தாமரை செடிகள் மூலம் டீசல் தயாரிக்கும் முறை அறிமுகம்

## கைத்தொழிற்றுறை பிரதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நீர் நிலைகளில் வளரும் ஆகாயத் தாமரை செடிகள் மூலம் டீசல் தயாரிக்கும் முறையை விரைவில் அறிமுகப்படுத்த தயாராக இருப்பதாக, வர்த்தகம் மற்றும் கைத்தொழிற்றுறை பிரதியமைச்சர் லக்ஷ்மன் வசந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

களுத்துறை நாவுல பிரதேசத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எரிபொருளுக்காக நாட்டில் செலவிடப்படும் பணத்தை குறைப்பதற்காக ஆகாயத் தாமரை செடியில் இருந்து டீசல் தயாரிக்கும் வெற்றிகரமான முறையை இலங்கையில் அறிமுகப்படுத்த தயாராக இருகின்றேன்.

75 தொன் ஆகாயத் தாமரை செடியில் இருந்து 24 ஆயிரம் லீற்றர் டீசல் தயாரிக்க முடியும்.

தென் ஆபிரிக்காவின் அபிவிருத்தித் திட்டமாக ஜனாதிபதியுடன் பேசி இலங்கையில் அதனை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

நாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் காணப்படும் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இவ்வாறான நீர்ச் செடிகள் மூலம் எரிபொருள் தயாரிக்க முடிந்தால் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கியமானது என தான் நம்புவதாகவும் பிரதியமைச்சர் கூறியுள்ளார். (2)

# லிபியா பயணிக்க முயன்றவர்கள் கைது

போலி விசா மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக லிபியாவுக்கு செல்வதற்கு முயன்ற பங்களாதேஷ் பிரஜைகள் மூவரை கைதுசெய்துள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவின் விமானநிலைய பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

22.36 மற்றும் 40 வயதுகளுடைய இந்த சந்தேகநபர்கள் மூவரும் நேற்று அதிகாலை 12.50இற்கு கைதுசெய்யப்பட்டுள் ளனர்.

சந்தேகநபர்கள் மூவரையும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள்தாகவும் அப்பிரிவினர் தெரிவித்தனர். (2)

# நாவல் வெளியீடு

மகிழ் வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் என். நடேசன் எழுதிய அசோகனின் வைத்தியசாலை எனும். நாவல் வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள திருமறைக்கலாமன்றம் கலைத்தூது மண்டபத்தில் எழுத்தாளர் இயல்வாணன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் விமர்சனவுரைகளை சி.ரமேஷ் .சு.குணேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் நூலாசிரியர் நடேசன் மற்றும் நாவலாசிரியையும் பெண்ணியச் செயற்பாட்டாளருமான ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (2-254)

# குராம் ஷேக்கின் வழக்கு தீர்ப்பு இரு வாரங்களில்

(கொழும்பு)

பிரித்தானிய பிரஜையான குராம ஷேக் கொலை வழக்கின் தீர்ப்பு இன்னும் இரண்டு வாரங்களுக்குள் வழங்கப்படவிருக்கின்றது.

இந்த கொலை தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ரோஹனி வல்கம முன்னிலையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், இருதரப்பு தொகுப்புரைகள் சமர்ப்பிக்கப்படவிருகின்றன.

பிரித்தானிய பிரஜையான குராம் ஷேக், தங்காலை ரிசோட் ஹோட்டலில் வைத்து 2011ஆம் ஆண்டு டிசெம்பர மாதம் 25ஆம் திகதி கொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வழக்கில், தங்காலை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சம்பத் சந்திரகுப்த விதாணகே பதிரண உள்ளிட்ட ஐவர் சந்தேகநபர்களாக குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2)

# கோபி,அப்பன்,தேவியன் மரணம் குறித்து நீதிமன்றில் விளக்கம்

## மரண சான்றிதழ் வழங்கவும் உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புதிய தலைவர்களாக கருதப்பட்ட கோபி, அப்பன் மற்றும் தேவியன் ஆகியோரின் மரணம் தொடர்பில் நீதிமன்றில் நேற்று முன்தினம் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மூன்று பேரும் ரைபிள் ரக துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியே உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தலை மற்றும் வயிற்றுப் பகுதிகளில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர்களின் மரணம் தொடர்பில் கெப்பிற்றிகொல்லாவ நீதவான் எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் விசாரணை நடத்தப்பட்டது.

புலி உறுப்பினர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்கு மரண சான்றிதழ்களை வழங்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பதவிய, சுற்றுலா நீதிமன்றின் முன்னிலையில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை ஆகியன தொடர்பிலும் விசாரணைகளின போது கவனம்செலுத்தப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் என படைத்தரப் பினரால் அடையாளப்ப டுத்தப்பட்ட கோபி, அப்பன் மற்றும் தேவியன் ஆகியோர் பதவிய பிரதேசத்தில் வைத்து இராணுவத் தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி உயிரிழந்திருந்தனர். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### கார்த்திகேசு கந்தையா

நாவலர் வீதி, நாவாந்துறையை வசிப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு கந்தையா நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### திருமதி பூமணி செல்லப்பா



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூமணி செல்லப்பா காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### மயில்வாகனம் மதனராசா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் லண்டன் Walthamstow ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகணம் மதனராசா கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Forest Park Cemetery & Crematorium, Forest Road, Hainault,Essex, IG6 3HP,UK என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி ஆறுமுகம் செல்லமுத்து



சரசாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்லமுத்து கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave Markham, ON L3R 5G1 Canada என்னும் முகவரியில் நடைபெறும்



### கணபதிப்பிள்ளை சிறிஸ்கந்தராசா

தனங்கிளப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிறிஸ்கந்தராசா கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தனங்கிளப்பு முள்ளிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அண்மையில் ஆஸ்திரியா சென்றிருந்த ஈரான் வெளியுறவு அமைச்சர் முகமது ஜாவித் ஜரீப்(வலது) ஜரோப்பியன் யூனியன் வெளியுறவு செயலர் கேத்ரின் ஆஸ்டோனை சந்தித்த போது...

# ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதி ஹெலிகொப்டர் மீது தாக்குதல்



ஆப்கானிஸ்தானில் அரசுக்கு எதிராக தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று ஜனாதிபதி ஹமீத் கர்சாய் பயணம் செய்யும் ஹெலிகொப்டர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.


தலைநகர் காபூலில் உள்ள விமான நிலையத்தில் இந்த ஹெலிகொப்டர் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.

அப்போது அங்கு தீவிரவாதிகள் கடும் பாதுகாப்பையும் மீறி உள்ளே புகுந்தனர். பின்னர் 2 ராக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். அதில்,ஜனாதிபதி ஹமீத் கர்சாயின் ஹெலிகொப்டர் முற்றிலும் எரிந்து நாசமானது.

அது தவிர மேலும் ஹெலிகொப்டர்கள் சேதம் அடைந்தன. இத்தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

தீவிரவாதிகளின் இத் தாக்குதலால் யாருக்கும் உயிர் சேதமோ, காயமோ ஏற்படவில்லை என இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆளுநர் ரோசைய்யாவுக்கு ஜெயலலிதா வாழ்த்து



(சென்னை)

தமிழக ஆளுநர் ரோசையா தனது 81 ஆவது பிறந்த நாளை நேற்றைய தினம் கொண்டாடினார்.

அவருக்கு பலரும் தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

ரோசய்யாவின் பிறந்த நாளையொட்டி அவருக்கு முதலமைச்சர் ஜெயலலிதா மலர் கொத்துடன் வாழ்த்துக் கடிதம் அனுப்பியுள்ளதுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

தனக்கு பிறந்த நாள் வாழ்த்து கூறிய முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கு கவர்னர் ரோசய்யா தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

# சிரியாவின் பெரிய எண்ணெய் வயலை ஐ.எஸ்.ஐ.எஸ் படை கைப்பற்றியது

(டமாஸ்கஸ்)

ஈராக் மற்றும் சிரியாவில் அரசுப் படைகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வரும் போராளிகள் ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற பெயரில் அழைக்கப்படுகிறார்கள்.

ஐ.எஸ்.ஐ.எஸ். என்பது 'இஸ்லாமிக் ஸ்டேட் ஆப் ஈராக் அன்ட் சிரியா' என்ற ஆங்கில வார்த்தையின் சுருக்கமாகும்.

அவர்கள் வடக்கு சிரியாவில் ஈராக் எல்லையோரம் பல பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, அப்பகுதி முழுவதையும் ஒன்றிணைத்து தங்களது அரசாட்சிக்கு உட்பட்ட தனிநாடாக அறிவித்துள்ளதுடன் தற்போது சிரியாவின் பெரிய எண்ணெய் வயல் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

நாள் ஒன்றுக்கு 75 ஆயிரம் பேரல்கள் கச்சா எண்ணையை உற்பத்தி செய்யும் இந்த வயலினை ஐ.எஸ்.ஐ.எஸ். கைப்பற்றியுள்ளதாக சிரியாவில் உடுள்ள பிரிட்டன் நாட்டின் மனிதவுரிமை கண்காணிப்பக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



கைப்பற்றப்பட்ட எண்ணெய் வயலில் ஒரு எரிவாயு தயாரிப்பு தொழிற்சாலை, மின்சார உற்பத்தி நிலையம் ஆகியவையும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கையும், சிரியாவின் ஒரு பகுதி மற்றும் துருக்கியின் ஒரு பகுதி ஆகியவற்றையும் இணைத்து தனி இஸ்லாமிய நாட்டை உருவாக்குவது ஐ.எஸ்.ஐ.எஸ் இன் திட்டமாகும்.

இதுமட்டுமல்லாமல் எதிர்காலத்தில் பக்கத்து நாடான லெபனான், பாலஸ்தீனம், இஸ்ரேல், ஜோர்டான், துருக்கி ஆகிய நாடுகளையும் ஒன்றிணைத்து பெரிய அளவிலான இஸ்லாமிய தேசத்தை உருவாக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

2003 ஆம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தபோது சில அரபு நாட்டினர் சேர்ந்து இந்த படையை உருவாக்கினார்கள.

அப்போது பெயரளவுக்கு தான் இது செயற்பட்டு வந்தது.

ஆனால் 2006 ஆம் ஆண்டுக்கு பிறகு இது தீவிரமாக செயற்பட ஆரம்பித்தது.

சிரியா போருக்கு பிறகு இந்த படையில் ஏராளமானோர் சேர்ந்தனர்.


தற்போது 11 ஆயிரம் பேர் படையில் உள்ளனர். அதில் 6 ஆயிரம் பேர் ஈராக்கில் போரிட்டு வருகிறார்கள். 5 ஆயிரம் பேர் சிரியாவின் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு உள்ளனர்.

அரபு நாடுகள் பலவற்றில் சன்னி முஸ்லிம்கள் அதிக அளவில் உள்ளன்ர்.

அவர்களும் இவர்களுக்கு பண உதவி செய்து வருகிறா ர்கள்.

இந்த படையின் தலைவராக அபுபக்கர் அல் பகாதி செயற்பட்டு வருகிறார்.

## ஜம்மு காஷ்மீர் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது இந்திய பிரதமர் நரேந்திரமோடி



(ஜம்மு)

பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் முதல்பயணமாக நரேந்திரமோடி நேற்று ஜம்மு காஷ்மீர் சென்றுள்ளார்.

ஆயிரத்து 132.75 கோடி செலவில் உருவாக்கப்பட்ட உதாம்பூர்-கத்ரா புகையிரத பாதையை ஆரம்பித்து வைத்தார். பயங்கரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதால் மோடி வருகையை முன்னிட்டு ஜம்மு காஷ்மீரில் இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. புனித தலமான வைஷ்ணவிதேவி கோயில் செல்லும் பக்தர்களுக்கு இந்த புகையிரத சேவை பயனுள்ளதாக இருக்கும். இந்த புகையிரதம் 10 சுரங்க பாதைகள், 36 பாலங்களைக் கடந்து செல்லும்.

காஷ்மீர் மாநில முதல்வர் உமர்அப்துல்லா இந்த நிகழ்வை புறக்கணிப்பதாக இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் உமர் விழாவில் பங்கேற்றார். ரயில்வே துறை அமைச்சர் சதானந்த கவுடா மற்றும் ரயில்வே உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

விழாவில் பிரதமர் மோடி பேசுகையில்,

இந்த புகையிரதசேவை நாடு முழுவதும் உள்ள யாதரீகர்களுக்கு பெருமளவில பயன்படும். இந்த காஷ்மீர மக்களுக்கு மட்டுமல்லாமல் இந்தியர்கள் அனைவருக்கும் உதவும். அமர்நாத் யாத்திரை, ரமலான் ஆகியன நடைபெற்று வரும் காலம் இது. இந்த புகையிரதம் ஜம்மு காஷ்மீரின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும். ஜம்மு காஷ்மீர் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது எனத் தெரிவித்தார்.

# கச்சதீவை மீளப் பெறும் பொறுப்பு மத்தியரசிற்குண்டு

## சமத்துவக் கட்சி தலைவர் சரத்குமார் தெரிவிப்பு


(சென்னை)

நடைபெற இருக்கும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கச்சதீவைத் திரும்பப் பெறும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இலங்கை அரசோடு பேசி கச்சதீவை உடனடியாக மீட்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசிற்கு உள்ளது என் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் ஆர்.சரத்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

சென்னை உயர்நீதி மன்றத்தில் கச்சதீவு தொடர்பான வழக்கில் மத்திய அரசு தாக்கல் செய்த மனுவில், இந்திய மீனவர்களுக்கு கச்சதீவு [illegible] உரிமை இல்லை என்று கூறப்பட்டுள்ளது. நமக்கு உரிமையான பகுதி நமக்கு திரும்பக் கிடைக்க வேண்டும் என்ற நிலையில், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு ஆதரவாக மத்திய அரசு செயற்பட்டால் தான் அது நியாயமானதாக இருக்கும்.



நடைபெற இருக்கும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் கச்சதீவைத் திரும்பப்பெறும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இலங்கை அரசோடு பேசி கச்சதீவை உடனடியாக மீட்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருப்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுவே தமிழக மீனவர்களின் பிரச்சினைகளை ஓரளவு குறைக்க உதவும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

வரலாறு காணாத வகையில் இனப்படுகொலை புரிந்த இலங்கைக்கு, உலகமே எதிராக குரல் கொடுத்து நடவடிக்கை எடுக்கத் தயாராகி வரும்போது நாம் அவர்களுக்கு அரசியல் சட்டத்திற்கு புறம்பாக அளித்த சலுகையை திரும்பப் பெறுவது ஒன்றும் தவறல்ல என அறிக்கையில் அவர் கூறியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானம், சகிப்புத் தன்மை , கருணை ஆகியவற்றில் அடங்கியதே விவேகம்.

- ரைதுஸ்திரர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அளுத்கம கட்டுமானப் பணிக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

அளுத்கம மற்றும் பேருவளை பொலிஸ் பிரிவுகளில் அண்மையில் ஏற்பட்ட வன்முறைகளால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் இராணுவத்தினரின் மீள்கட்டுமான பணிக்கு களுத்துறை நீதிவான் நீதிமன்றம் இடைக்காலத் தடையை விதித்துள்ளது.

அத்துடன் குறித்த வன்முறைகளில் உயிரிழந்த இருவரின் பிரேத பரிசோதனைகளை முன்னெடுத்த சட்ட வைத்திய அதிகாரிக்கும் நீதவான் அழைப்பாணை பிறப்பித்துள்ளார்.

குறித்த வன்முறையின்போது உயிரிழந்த இருவர் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் களுத்துறை மேலதிக நீதவான் ஆய்ஷா ஆப்தீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த தடை உத்தரவு பிற்ப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின்போது உயிரிழந்த இரு நபர்களின் சார்பிலும் ஆஜரான சட்டத்தரணிகளுக்கு மேலதிகமாக சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தலைமையிலான விஷேட சட்டத்தரணிகள் குழு மன்றில் ஆஜரானது.

இதன்போது மன்றுக்கு விஷேட வேண்டுகோள் ஒன்றை முன்வைத்த சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய உள்ளிட்ட குழுவினர், கடந்த மாதம் 15-ம் திகதி அளுதகம மற்றும் பேருவளை பொலிஸ பிரிவுகளில் இடம்பெற்ற வன்முறைகளின்போது இருவர் உயிரிழந்தும் 120ற்கும் மேற்பட்ட வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ர நிலையில் அரச இரசாயன பகுப்பாய்வுப் பிரிவினர் அங்கு சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளவில்லை எனச் சுட்டிக்காட்டினர்.

இதனைவிட குறித்த வன்முறைகளில் உயிரிழந்தவர்களில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அதனால் குறித்த இரு ஜனாஸாக்களையும் மீண்டும் தோண்டி எடுத்து பரிசோதனைகளை மேற்கொள்ள உத்தரவிட வேண்டும்.

அதனால் அந்த இடங்களில் உடனடியாக அரச இரசாயன பகுப்பாய்வுகளுக்கு உடன் உத்தரவு பிறப்பிப்பதுடன், அந்த இடங்களில் மட்டும் தற்போதைக்கு இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு தற்காலிகமான தடை உத்தரவொன்றை பிறப்பிக்க வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கத்தினரால் மன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எதிர்வரும் 31-ம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த நீதிவான் அன்றைய தினம் அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் வன்முறைகளில் உயிரிழந்த மொஹம்மட் ஸஹ்ரான் மற்றும் மொஹம்மட் சிராஸ் ஆகியோரின் மரணம் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரியையும் அன்றைய தினம் மன்றில் ஆஜராகுமாறு நீதிவான் அழைப்பாணை பிறப்பித்தார். (2)

## அநீதிக்கான எதிர்ப்பை சிங்கள மக்களே ஆரம்பிக்க வேண்டும்

நாட்டில் நாளுக்கு நாள் ஏதோவொரு வகையில் பிரச்சினைகள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

இந்தப் பிரச்சினைகள் 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் அதிகம் எனலாம். இவ்வாறான பிரச்சினைகள் நாட்டில் பெரும்பான்மையின் ஆதிக்கத்திற்கு உதவும் என யாரும் நினைக்கலாம்.

ஆனால் இத்தகைய பிரச்சினைகள் நாட்டின் ஆரோக்கியத்தை அதீதமாகப் பாதிக்கும் என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மக்களின் பொருளாதாரத் தேவைகள் மற்றும் உலகமயமாதலுக்கு ஈடுகொடுக்க வேண்டிய கட்டாயங்கள் இருக்கும்போது,

சில அரசியல் சக்திகள் மக்களிடையே இன, மத, மொழி பேதங்களை வலுக்கட்டாயமாக திணித்து குழப்பத்தை ஏற்படுத்துவதில் அதிதீவிரம் காட்டி வருகின்றன.

மக்களைக் குழப்புவதன் மூலமே தங்களின் இருப்பினை நிலைநிறுத்த முடியும் என்ற நிலையில், இத்தீய சக்திகள் மக்களை பேதப்படுத்தும் தந்திரோபாயத்தில் உச்சமாக ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் விழிப்படையச் செய்கின்ற-மக்களிடையே தெளிவான சிந்தனையைத் தோற்றுவிக்கின்ற அமைப்புகள் தோற்றம் பெறுவது அவசியம்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் இருக்கக் கூடிய அத்தனை அரசியல் அமைப்புகளும் இனத்தால், மொழியால், மதத்தால் பிரிந்து நின்று தங்களைத் தக்க வைப்பதில் தந்திரோபாயம் வகுக்கின்றன.

இலங்கை என்ற இந்த அழகிய திருநாட்டில் இன, மத, மொழி என்ற பரிமாணங்களில் ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின் சகல இனங்களையும் உள்ளடக்கியதான அரசியல் அமைப்புகள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அப்படி ஏதும் நடந்ததாக இல்லை.

இதன் காரணமாக பொது பல சேனா போன்ற அமைப்புகள் பெரும்பான்மை இனமாகிய சிங்கள மக்களைத் தங்களின் கைகளுக்குள் வைத்துக் கொண்டு தாங்கள் செய்யும் அநீதிகளுக்கு கரகோசம் பெற்று வருகின்றன.

இத்தகைய அநீதிகளை எதிர்ப்பதற்கான ஒரே வழி பெரும்பான்மை இனமாக இருக்கக்கூடிய சிங்கள மக்களிடையே விழிப்புணர்வை-தெளிந்த சிந்தனையை-இன, மத ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதாகும்.

உதாரணமாக தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் குறித்து சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் அவர்கள் பொது பல சேனா சொல்கின்ற கருத்துக்களையே நம்பி இருப்பர்.

ஆக, இந்த நாட்டில் மதத்தின், இனத்தின் பெயரால் இடம்பெறும் கொடுமைத்தனங்களை எதிர்க்க வேண்டியவர்கள் சிங்கள மக்களே!

என்றைக்கு சிங்கள மக்கள் பேரினவாதத்திற்கு எதிராக; பௌத்த ஆதிக்கத்திற்கு மாறாக குரல் கொடுக்கின்றனரோ அன்றுதான் பொது பல சேனா போன்ற அமைப்புகளின் உயிர்ப்புகள் கருகிப்போகும்.

எனினும் நியாயமான கருத்துக்களை, உண்மை நிலைப்பாடுகளை, சிறுபான்மை இன மக்களுக்கு இந்த நாட்டில் நடக்கின்ற அநீதிகளை அதற்கமைவாக இருக்கக்கூடிய அரசியல் சட்ட அமைப்புக்களை, சிங்கள மக்களுக்கு எடுத்தியம்ப சிறுபான்மை இனத்திடம் எந்த ஏற்பாடுகளுமில்லை.

பொது பல சேனாவின் போக்கிரித்தனத்திற்காக ஒட்டுமொத்த சிங்கள மக்களையும் நாம் குறை கூறி விட முடியாது. பொதுபலசேனாவின் கடும்போக்கை சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவதே பொது பலசேனாவின் ஆயுளை முடிவுறுத்துவதற்கான ஒரே வழி.

ஆகவே, சிங்கள மக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துக் கூறக்கூடிய ஒரு பலமான அமைப்பை உருவாக்குவதே காலத்தின் கட்டாய தேவையாகும்.

## பண்டாரவன்னியன் நாடகவிழா நாளை

(குருமன்காடு)

வன்னி பெருநிலப்பரப்பை அந்நிய சக்திகளிடம் வீழ்ச்சியுறாமல் அரசாண்ட, இறுதி தமிழ் மன்னன் பண்டார வன்னியனின் அஞ்சா நெஞ்ச வாழ்க்கையை கூறும் வரலாற்று நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் அரங்கேற்றம் செய்யப்படவுள்ளது.

வட மாகாணசபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகனின் முயற்சியால், ஏறத்தாழ 7 வருடங்களுக்கு பின்னர் முல்லை கலைஞர்களால் அரங்கேற்றம் செய்யப்படவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை. சேனாதிராசா, சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சுகாதாரத் துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாண சபை உறுபபினர்கள் லிங்கநாதன், தியாகராசா, இந்திரராசா மற்றும் வரலாற்று ஆய்வாளர் அருணா செல்லத்துரை ஆகியோருடன் அகளங்கன், வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-250)

## பிள்ளையார் ஆலய கூரை பிரித்து திருட்டு

(கிளிநொச்சி)

வன்னேரிக்குளம் குளக்கட்டுப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் வியாழன் இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி ஆலயத்தின் கூரையைப் பிரித்து கோயிலுக்குச் சென்ற திருடர்கள் மூலஸ்தானத்திலுள்ள பிள்ளையார் விக்கிரகத்தை பெயர்த்ததுடன் அதன் கீழ் வைக்கப்பட்டிருந்த தங்கத் தகட்டை களவெடுத்துச் சென்றுள்ளனர்.

இது சம்பந்தமாக ஆலய பரிபாலன சபையினரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-254)

## பொங்கல் விழா

(கிளிநொச்சி)

புத்துவெட்டுவான் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய ஆனிப் பொங்கல் விழா நாளை மறுதினம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை வரை நடைபெறவுள்ளது.

இதற்கமைய திங்கட்கிழமை காலை 10 மணிக்கு விசேட அபிஷேகங்கள், பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு பொங்கல் கொடி ஏற்றப்படும்.

அன்றையதினம் மாலை 6 மணிக்கு பந்தம் எடுக்கும் வைபவமும் 7 மணிக்கு காவடி, பாற்செம்பு, கர்ப்பூரச் சட்டி என்பன இடம்பெறும்.

தொடர்ந்து செவ்வாய் அதிகாலை 4 மணிக்கு தீக்காவடியும் காலை 5 மணிக்கு வேள்வியும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-254)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### அந்தர்யாமின் என்றால் என்ன?

பல தனிப்பறவைகள் எவ்வாறேனும் அந்த உயரிய சைதன்யம் அல்லது அந்தர்யாமினுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. அந்தர்யாமின் உள்ளது அல்லது உங்களுடைய அந்தர்யாமின் விழித்தெழுந்துள்ளது எனக் கூறினால் அதன் பொருள் என்னவெனில் நீங்கள் முழுமையின் ஓர் அங்கம் என்பதே. நீங்கள் அந்தப் பூர்ணத்துடன் தொடர்பு கொண்டுள்ளீர்கள். உங்களுக்கு அந்த முழுமையைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். பறவைக்கூட்டத்தில் ஒரு பறவை பிரிந்து சென்றுவிட்டால் இரண்டு அல்லது மூன்று பறவைகள் கூட்டத்திலிருந்து வெளிவந்து அந்தப் பறவைக்கூட்டத்துடன் சேர்க்க உதவி புரியும். அதன் பிறகே அந்தக் கூட்டத்தால் செயற்பட முடியும். அந்தச் சிறு பறவை பெரிய கூட்டத்தோடு செல்லும் வரைதான் அந்தப் பறவைக் கூட்டத்தின் விருப்பப்படி அதைத் தொடர்கிறது எனக்கூறலாம். (அடுத்த வாரம் தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்


### பிறருக்காக வாழுங்கள்



- வாழ்க்கையில் முன்னேற துணைபுரிவது எதுவோ அதுவே நன்மை. கீழ்நோக்கி வீழ்ச்சிக்குத் துணை புரிவது எதுவோ அது தீமை.
- தன்னம்பிக்கை கொண்டவன் வாழ்வு சரித்திரத்தில் இடம் பிடிக்கும். இந்த உண்மையை எப்போதும் மறந்து விடாதே.
- பொறாமையும், சோம்பலும், வெறுப்பும் அடிமையின் இயல்புகள். உள்ளத்தில் இவற்றை நுழைய அனுமதி அளிக்காதே.
- சுயநலத்தோடு வாழாதே. தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்வதே நல்லொழுக்கம். எந்த நிலையிலும் சுயநலத்தை மறக்கவே பழகு.
- உயிர் வாழ்வதற்கு அறிகுறியே, வளர்ச்சிக்கு மேல் வளர்ச்சி அடைவது தான். துணிந்து நின்று பணி செய்தால் தான் இது சாத்தியம். எனினும், அதில் கிடைக்கும் பலனை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் சிறந்த அணியாக சென்.ஜோன்ஸ் கல்லூரி தெரிவு



வடமாகாணத்தின் 19 வயதுப் பிரிவு சிறந்த துடுப்பாட்ட அணியாக யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சிங்கர் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மாகாணத்தின் சிறந்த அணிகளுக்கான தெரிவிலேயே சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வடமாகாணத்தில் சிறந்த அணியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான விருது கடந்த ஜூன் 30 ஆம் திகதி கொழும்பு பி.எம்.ஐ.சி.எச் இல் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

நூற்றாண்டுகள் கடந்த வரலாற்றினைக் கொண்ட வடக்கின் மாபெரும் போர்களில் பங்குபற்றும் அணிகளில் ஒன்றான சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, இவ்வருடம் இடம்பெற்ற வடக்கின் மாபெரும் போரில் வெற்றிபெற்றிருந்தது.

வெளிமாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டியில் மவுண்டன்லெவினியா, மாத்தளை ஆகிய இடங்களைச் சேர்ந்த சென். தோமஸ் கல்லூரிகளின் அணிகளையும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# ஜே.பி.எல். வெற்றிக் கிண்ணம்; சென்றலைட்ஸ் அணி சம்பியன்



கே.சி.சி.சி. அணியை 7 விக்கெட்டுக்களால் இலகுவாக வென்ற சென்றலைட்ஸ் அணி ஜே.பி.எஸ். வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது. யெப்னா பிறிமியர் லீக்கின் இரண்டாவது தொடர் கடந்த மே 10 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வந்தது. இந்த சுற்றுப் போட்டியில் 18 அணிகள் பங்கேற்றிருந்தன.

இதன் இறுதியாட்டம் அண்மையில் இடம்பெற்றது. இந்த இறுதியாட்டத்தில் நடப்புச் சம்பியனான கொக்குவில் மத்திய சனசமூக நிலைய (கே.சி.சி.சி.) அணியும் சென்றலைட்ஸ் அணியும் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி. அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்கம் கொடுத்த பங்குஜன், ஜெயரூபன் இணையால் நீடிக்க முடியவில்லை. பங்குஜன் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ராகுலன் களமிறங்கினார்.

இந்நிலையில் ஜெயரூபன் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த வீரர்கள் எவரும் சிறப்பாக செயற்படாத நிலையில் 19.5 ஓவர்களில் 114 ஓட்டங்களுக்கு கே.சி.சி.சி. சகல விக்கெட்களையும் இழந்தது. சென்றலைட்ஸின் பந்து வீச்சில் டார்வின் 4 விக்கெட்களையும் ஜெரிக்துஷான், கோகுலன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 17.2 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் எட்வர்ட் எடின் 20 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஜெரிக் துஷான் 44, செல்ரன் 33 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். ஆட்ட நாயகனாக ஜெரிக்துஷான் தெரிவானார். (க)

# குருநகர் கார்மேல் போய்ஸ் சம்பியன்



போர்ஸ்டார் அணியினை வீழ்த்தி குருநகர் கார்மேல்போய்ஸ் அணி சம்பியன். கிறீங் கிங்ஸ் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட 6 பேர் 5 பந்து பரிமாற்றத்தினை கொண்ட மாபெரும் மென்பந்தாட்ட சுற்று போட்டியில் முதலாவது சுற்று போட்டியில் ஸ்ரீகாமாட்சி வி.கழகத்தையும் காலிறுதியாட்டத்தில் றோயல் கிங்ஸ் வி . கழக A அணியினையும் அரையிறுதியாட்டத்தில் றோயல் கிங்ஸ் வி . கழக B அணியினையும் வீழ்த்தி குருநகர் கார்மேல்போய்ஸ் அணி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

இறுதியாட்டம் அண்மையில் ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற குருநகர் கார்மேல்போய்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய குருநகர் கார்மேல்போய்ஸ் அணி 4.2 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 37 ஓட்டங்களை பெற்றது. இதில் அதிக ஓட்டங்களாக மது 15 ஓட்டங்களையும் அலன் 14 ஓட்டங்களை யும் பெற்றனர். பந்து வீச்சில் அலன் 2 இலக் குகளையும் சாந்தன் 2 இலக்குக ளையும் கைப்பற்றினர்.

38 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொணடு களமிறங்கிய போர்ஸ்டார் அணி 26 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பந்து வீச்சில் அலன் 2 ஓட்டங்களை வழங்கி 3 இலக்கையும் மது, அஜன் தலலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.11 ஓட்டங்களால் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி சம்பியன் ஆனது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக குருநகர் கார்மேல்போய்ஸ் அணியின் அலன் தெரிவு செய்யப்பட்டார்.தொடர் ஆட்ட நாயகனாக கார்மேல்போய்ஸ் அணியின் அலன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# ஹென்றீசியன் பிறிமியர் லீக் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்


ஹென்றீசியன் பிறிமியர் லீக்கின் உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது நாளாகவும் நடைபெற்றன.

இதில் முதலாவது ஆட்டத்தில் ஊர்காவற்றுறை நசரேத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. ஆரம்பத்தில் பின்னடைவைச் சந்தித்திருந்தாலும் பின்னர் உத்வேகத்துடன் ஆடிய டைமன்ஸ் அணி இப்போட்டியில் வெற்றி பெற்றுக்கொண்டது. போட்டியின் 10 ஆவது நிமிடத்தில் நசரேத் வீரர் இசேரன் முதல் கோலினை போட்டு அதிர்ச்சியளித்தார். இதை தொடர்ந்து தமது ஆக்ரோச ஆட்டத்தை டைமன்ஸ் அணியினர் வெளிப்படுத்தினர். 25 ஆவது நிமிடத்தில் டைமன்ஸ் வீரர் குலேந்திரா கோல் போட முதல் பாதி முடிவில் 1:1 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் சமநிலை பெற்றிருந்தன. தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்திலும் விறுவிறுப்பு தொடர்ந்தது. இரு அணிகளும் கோல்களைப்பெற கடும் பிரயத்தனம் மேற்கொண்டன. 48 ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்ட துவிகரன் அதனை கோலாக மாற்ற 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற டைம்ன்ஸ் அணியினர் மூன்றாம் சுற்றுக்குள் தகுதி பெற்றனர்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

பெரியவிளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற போட்டியில் மனோகரா அணியினர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர். ஆட்டத்தின் முதல் பாதி மிகவும் விறுவிறுப்பானதாக இருந்தது. கோல்களைப் பெற இரு அணிகளும் முயற்சிகள் மேற்கொண்டபோதும் அவை கைகூடவில்லை. ஆனாலும் இரண்டாம் பாதியில் மனோகரா வீரர்கள் வேகமெடுக்கத் தொடங்கினர். மனோகரா வீரர் அனோஜன் 34 ஆவது நிமிடத்திலும், 47 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் போட்டார். துசியந்தனும் தன் பங்கிற்கு கோல் போட 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற அல்வாய் மனோகரா வி.க அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்திற்கும் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற ஆட்டம் மிகவும் விறுவிறுப்பானதாக அமைந்திருந்தது. போட்டியின் ஆரம்பம் முதலே இரு அணிகளும் ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். கோல்களைப்பெற இரு அணிகளும் கடும் பிரயத்தனம் மேற்கொண்டன. ஆனால் பலமான பின்கள வீரர்கள் இரு அணிகளிலும் இருந்ததால் முயற்சிகள் கைகூடவில்லை. ஆனாலும் போட்டி நிறைவடைய ஒரு நிமிடம் மீதமிருக்கையில் கிடைத்த வாய்ப்பினை பயன்படுத்திய பாடுமீன் வீரர் றொக்சன் அதனை கோலாக மாற்ற பாடுமீன் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. (க-23)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் வவுனியா சைவப் பிரகாசம் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பெண்கள் அணி பதக்கங்களை வென்றுள்ளது. வெற்றி பெற்ற பெண்கள் அணியுடன் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) பி.விஸ்ணு. பொறுப்பாசிரியர் கோமளாதேவி மற்றும் பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜ் ஆகியோரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாம்பவான்கள் மோதும் கிரிக்கெட் இன்று



லண்டனில் உள்ள லோர்ட்ஸ் அரங்கத்தின் 200-வது ஆண்டு விழாவை முன்னிட்டு எம்.சி.சி, ரெஸ்ட் ஒப் தி வேர்லட் என்ற கிரிக்கெட் போட்டி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த போட்டியானது இன்று லோர்ட்ஸ் மைதானத்தில் நடக்கிறது. இரு அணிகளும் வெள்ளை சீருடையில் கலக்க தயாராக உள்ளனர். இதற்காக முன்னாள் மற்றும் தற்போதைய பிரபல கிரிக்கெட் வீரர்கள் லண்டனில் ஒன்று கூடியுள்ளனர்.

இந்தப் போட்டிக்காக ஜாம்பவான்களான சச்சின் டெண்டுல்கர், பிரையன் லாரா, ஷேன் வோர்ன், ராகுல் டிராவிட், முத்தையா முரளிதரன் உள்ளிட்டோர் லண்டனில் கூடியுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு விருந்து அளிக்கப்பட்டது. அப்போது சச்சின் உள்ளிட்ட வீரர்கள் கூட்டாக சேர்ந்து புகைப்படங்கள் மற்றும் செல்ஃபீக்கள் எடுத்துக் கொண்டனர்.

அதில் ஒரு செல்ஃபீயில் சச்சின், டிராவிட், வோர்ன், லாரா, முரளிதரன், யுவராஜ் சிங் என்று ஜாம்பவான்கள் அனைவரும் ஒன்றாக உள்ளனர்.

இந்த செல்ஃபீயை பார்த்த ஷேன் வோர்ன் எம்.சி.சி. அணியுடன் இது தான் சிறந்த செல்ஃபீ என்று தெரிவித்துள்ளார். இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி சரியாக பிற்பகல் 3.15 மணிக்கு தொட ங்குகிறது. இதற்காக ரசிகர்கள் ஜாம்பவான்களின் விளை யாட்டுகளை காண ஆர்வமுடன் உள்ள னர்.

**எம்.சி.சி அணி**

சச்சின் டெண்டுல்கர் (அணித் தலைவர்), ஆரோன் பின்ச், ராகுல் டிராவிட், பிரையன் லாரா, சிவநாராயணன் சந்தர்போல், கிறிஸ் ரீட், டேனியல் வெட்டோரி, பிரட் லீ, சயட் அஜ்மல், ஷோன் டெய்ட், உமர் குல்.



**ரெஸ்ட் ஒப் தி வேர்ல்ட் அணி**

ஷேன வோர்ன் (அணித்தலைவர்) வீரேந்திர ஷேவாக், தமிம் இக்பால், அடம் கில்கிறிஸ்ட் (வாரம்), கெவின் பீட்டர்சன், யுவராஜ் சிங், போல் கொலிங்வூட், சஹிட் அஃப்ரிடி, பீட்டர் சிடில், முத்தையா முரளிதரன், ரினோ பெஸ்ட். (க)

# அமெரிக்க நிகழ்ச்சித் திட்டத்துக்கு அரசாங்கம் கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

இலங்கையில் வாக்காளர்களை தெளிவுபடுத்தும் பொருட்டு அமெரிக்காவின் யூஎஸ்எயிட் நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் நடத்தவிருந்த நிகழ்ச்சித் திட்டம், அரசாங்கத்தின் எதிர்ப்புக்கு மத்தியில் ரத்து செய்யப்பட்டிருக்கின்றது.

"வாக்காளர் கல்வி ஊடாக தேர்தல் ஒத்துழைப்பு" என்ற தொனிப் பொருளில் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த விரும்பும் சிவில் அமைப்புகள் தங்களின் யோசனைகளை முன்வைக்குமாறு யுஎஸ்எயிட் நிறுவனம் வெளியிட்டிருந்த பத்திரிகை விளம்பரத்தை அடுத்து, அதற்கு அரசாங்கத்திடமிருந்து எதிர்ப்பு கிளம்பியிருக்கின்றது.

இந்த சூழ்நிலையில், சிவில் அமைப்புகளுக்கு நேற்று வெள்ளிக்கிழமை மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியுள்ள யுஎஸ்எயிட் நிறுவனம், குறித்த நிகழ்ச்சித் திட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்தும் யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும் கூறியுள்ளது.

இலங்கையில் வாக்காளர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமெரிக்கா நிதியுதவி அளிப்பது, உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைக்கும் வேலை என்று அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரை அழைத்து விளக்கம் கேட்க இருப்பதாக வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கூறினார். (எ-11)

# நன்னடத்தைப் பாடசாலையில் இருந்த சிறுவன் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி அரச சிறுவர் நன்னடத்தைப் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்த முல்லைத்தீவு உடையார்கட்டினைச் சேர்ந்த புவனேஷ்வரன் ரகுவரன் (வயது-16) என்ற சிறுவன் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சிறுவன், குற்றச் செயலில் ஈடுபட்டதற்காக முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் கடந்த ஜுன் 30 ஆம் திகதி சிறுவர் நன்னடத்தைப் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையிலேயே, இச்சிறுவன் நேற்று வெள்ளிக்கிழமை இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவனின் சடலம் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார தெரிவித்தனர். (எ-6)

## காரை...

யினருடன் குறித்த இடத்துக்குச் சென்று அக்கைக்குண்டை செயலிழக்கச் செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

## இஸ்லாமிய...

யாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இன்று மோதலான சூழல் ஏற்பட்டுள்ளது. நாடு மற்றும் இனத்தின் எதிர்காலம் தொடர்பில் நாம் விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும்.

பிக்குகள் மற்றும் சிங்களவர்களுக்கு எதிராக இடையூறுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாத தீவிரவாதம் உள்ளது என்பது மிகத் தெளிவானது. பல பிரதேசங்களில் இவர்கள் உள்ளனர்.

பேருவளை சம்பவம் அவர்களின் செயற்பாடுகளில் ஒன்று. இந்த சம்பவங்களில் பௌத்த சிங்கள மக்களின் வீடுகளே அழிந்தன. எனினும் இதனை ஊடகங்கள் சரியாக வெளியிடவில்லை.

பிக்கு ஒருவர் தவறு செய்து மாட்டிக்கொண்டால், அவரது பெயர், கிராமம், அவர் இருக்கும் விகாரை உட்பட விபரங்களுடன் ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றன.

மன்னாரில் வில்பத்துவில் இன்று என்ன நடக்கின்றது. நாட்டில் சிங்கள பௌத்த மக்கள் அழிவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் பல நிறுவனங்கள் இதற்கு உதவி வருகின்றன என்றார். (எ-11)

# உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு லா லா லா பாடகி ஷகீரா ரெடி



உலகக்கிண்ண கால்பந்து தொடரின் இறுதி விழாவில் பிரபல கொலம்பிய பொப் பாடகி ஷகீரா தனது பாடலை பாடவுள்ளார்.

இந்த உலகக் கிண்ண தொடரின் தொடக்க விழாவில் லோபஸ் பாடிய பாடல் அந்த அளவு பிரபலம் அடையவில்லை.

ஆனால் கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் இவர் பாடிய "வக்கா வக்கா" பாடல் பட்டிதொட்டி எல்லாம் பட்டயை கிளப்பியது.

இந்நிலையில் தான் தயார் நிலையில் வைத்திருக்கும் "லா..லா.. லா" பாடலை இறுதிப் போட்டியில் பாட தயாராகி விட்டார் ஷகீரா.

இதுபற்றி அவர் கூறுகையில் நான் கால்பந்தாட்டங்களுடன் உள்ள சிக்கலான தொடர்பை வெளிப்படையான காரணங்களால் ஏற்றுக்கொண்டேன்.

அதேபோல் உலகக்கிண்ணம் உலக மக்களிடம் எந்த வகையில் இருக்கிறது என்பதை நான் உண்மையாக அறிந்து கொண்டு விட்டேன் என்று கூறியுள்ளார். (க)

## அமைச்சர்...

மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கவுள்ளதாகவும் முதலமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் ஆகியோருக்கான வாகனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்கள் வழங்கும் நிகழ்வு இன்று மாலை 5 மணியளவில் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் அமைச்சர்கள் மற்றும் அவைத்தலைவருக்கும் அறிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் அவைத்தலைவர் ஆகியோருக்கான வாகன கொள்வனவுக்கு என வரவு செலவுத்திட்டத்தில் தலா 58 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அந்த நிதியில் இருந்தே குறித்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறவுள்ள மாகாண சபை அமர்வுக்கு அமைச்சர்கள் மற்றும் அவைத்தலைவர் ஆகியோர் புதிய வாகனங்களிலேயே வந்து இறங்குவர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-6)

## இலங்கை...

தீவிரவாதிகள் இலங்கையை பயன்படுத்தி கடல்மார்க்கமாக தென்னிந்தியாவுக்கு ஊடுருவுவதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களால் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக இந்தியாவின் பாதுகாப்பு தரப்பினர் எச்சரித்துள்ளனர்.

இவ்வாறான தாக்குதல்கள் காரணமாக இலங்கையில் முஸ்லிம் தீவிரவாதம் உருவாகும் என்ற அச்சத்தில் இந்தியா இருப்பதாகவும் இதனால் இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படும் என்று கருதுவதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இந்திய அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் முக்கிய அவதானம் செலுத்தி பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக கூறப்படுகிறது.

இதற்காகவே வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவின் அழைப்பின் பேரில் அங்கு செல்வதாகக் கூறப்படுகிறது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்.அதிகாரி...

கையாளர்களுடன் அவுஸ்திரேலிய கடற்பரப்பிற்கு வந்த படகில் சென்றவர்களுக்கு என்ன நடந்தது என்ற சர்ச்சைக்கு இன்னும் முடிவு தெரியாத நிலையில் அவரது இந்த இலங்கை விஜயம் இடம்பெறவுள்ளது.

மொரிசன் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு வருவார் என எதிர்பார்ப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வரும் அவர் அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

கடந்த வாரம் அவுஸ்திரேலியக் கடற்பரப்பிற்குள் படகில் வந்த இலங்கை புகலிட கோரிக்கையாளர்கள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால் மொரிசன் மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கம் இது குறித்து கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

அதேவேளை புகலிட கோரிக்கையாளர்கள் சென்ற படகை தாம் காவலில்எடுக்கவில்லை என இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர்.

இதனிடையே படகில் சென்ற புகலிட கோரிக்கையாளர்கள் தொடர்பிலான செய்திகள் குறித்து ஐ.நாவின் அகதிகளுக்கான நிறுவனம் தனது கவலைகளை வெளியிட்டிருந்தது. (எ-11)

# யாழ்.நோக்கி வந்த...

பின்னமானது.

இச் சம்பவம் நேற்றுக்காலை 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவருக்குத் தேவையான ஆவணங்களுடன் அவரது குடும்பத்தினர் நேற்று அதிகாலை அக்கரைப்பற்றிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனர்.

அவர்கள் புறப்பட்ட வானில் பிரஸ்தாப மாணவியின் தாய், தந்தை சகோதரன் மற்றும் உறவினர் ஒருவர் அடங்கலாக நால்வர் பயணித்துள்ளனர்.

இவர்கள் தமது பயணத்தின் போது தமது மகளுடன் தொடர் பிலிருந்துள்ளனர்.

இந் நிலையில் சம்பவம் இடம் பெறுவதற்கு 15 நிமிடத்துக்கு முன்னதாக வவுனியாவில் நிற்பதாகவும் கூறியுள்ளனர்.

அதன்பின்னர் யாழ் நோக்கிப் புறப்பட்ட வான் நொச்சிமோட்டைக்கும் ஓமந்தைக்கும் இடையிலான பறநட்டகல் சந்தியின் வளைவில் திரும்பும் போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரமொன்றுடன் மோதி விபதுக்குள்ளானது.

இதில் பிரஸ்தாப மாணவியின் தாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

ஏனைய மூவரும்படுகாயமடைந்த நிலையில்வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற கொண்டுள்ளனர். (எ-11,250)


**for Rent / Sale**

TATA SuperACE

Salesபாவனைக்கு உகந்தது.நாள்/மாத வாடகைக்கு சாரதியுடன் கொடுக்கப்படும்.

**தொடர்பு: 0779766683** (6842)


# அமைச்சர்...

இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம்தற்போது தமது அமைச்சர்களுக்கும் அஞ்சுகின்றது. இதன் காரணமாகவே சில அமைச்சர்கள் விரும்பியதை பேச அனுமதித்து விட்டு வேடிக்கை பார்க்கின்றது.

ஜனாதிபதி அண்மையில் பேருவளையில் நடத்திய கருத்தரங்கில் இதனை நன்றாக அறிந்து கொள்ள முடிந்தது.

தமது அமைச்சர்கள் அரசாங்கத்தை விமர்சித்தாலும் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுகக போவதில்லை என ஜனாதிபதி கூறியிருந்தார்.

இது தந்திரமாக வெளியில்தெரிந்தாலும் அதில் இருக்கும் உள்ளார்ந்தம் வித்தியாசமானது.

அமைச்சர்கள் எதிர்க்கட்சி சென்று வடுவார்கள் என்று அரசாங்கம் பயப்படுகிறது. இதன் காரணமாகவே எதனையும் கூறுங்கள் நாங்கள் கோபிக்கவில்லை என்ற கதையை ஜனாதிபதி கூறியுள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளகதி அரசாங்கம் தற்போது கடும் வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ளது.

இதன் காரணமாகவே ஜனாதிபதி தேற்றும் நிகழ்சசிநிரலில் செயற்பட்டு வருகிறார் எனவும் சம்பிக்க பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# கிளி.மாவட்ட...

பங்கு கொண்டவர்கள் மாவட்ட செயலகத்திற்குள் சென்று மகஜர் கையளிக்கவும் பொலிஸார் அனுமதி மறுத்தனர்.

இருப்பினும் பொலிஸாருடன் மக்கள் முரண்பட்டதன் பின்னர் இருவரை மட்டும் உட்செல்ல பொலிஸார் அனுமதித்ததோடு அவர்களுடன் பொலிஸாரும் உட்சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# நேற்றும் இர...

னித்து பளைப் பொலிஸாரிற்கு தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து, அவ்விடத் திலிருந்து ஒரு எலும்புக்கூடும் நேற்று முன்தினம் இரண்டு எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டன.

அத்துடன், விடுதலைப் புலிகளின உத்தியோகபூர்வ சீருடை மற்றும், 10 மகஸீன்கள், 6 கைக்குண்டுகள் ஆகியனவும் நேற்றுமுன்தினம் மீடகப்பட்டிருந்தன.

இந்த நிலையில் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் தேடுதல் நடவடிக்கையில், அப்பகுதியில் மேலும பல எலும்பு கூடுகள் இருக்கலாம் எனப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (எ-11)

# இராணுவத்...

கரும்புலிகள்தினத்தில் விளையாட்டுக் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்தது மாத்திரமல்லாது, இந்த விளையாட்டுப்போட்டியை முன்னிட்டு நடைபெறும் நிகழ்வற்கு பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளும்படி எமது முதலமைச்சரிடம்வேண்டு கோளும் விடுத்திருக்கிறார்கள்.

ஆனால் இராணுவத்தினரின் அழைப்பை முதலமைச்சர் நிராகரித்து விட்டார் என உறுப்பினர்கள் தெரிவித்தனர். முதலமைச்சர் தனது பதிவின் போது,

தனிப்பட்டரீதியில் உங்களுடன் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் நீங்கள் என்னிடம் இராணுவத்தினராக வந்துள்ளீர்கள்.

இராணுவத்தை எங்கள் இடததை விட்டு வெளியேறுங்கள் என்று கோரிக் கொண்டு இருக்கின்ற நான எப்படி இராணுவத்தின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியும் என்று பதிலளித்திருக்கிறார் என வடக்கு மாகாணசபையின் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும் இராணுவத்தினரை வெளியேற்றக்கோரியும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ-6)

# புலிகளின்...

கர் ஊடகங்களிடம் கூறியுள்ளார்.

மற்றுமொரு சந்தேக நபர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கவை கொலை செய்யும் முயற்சிக்கு உதவியவர் எனவும் அவர் கூறியுள்ளார்.

மூன்றாவது சந்தேக நபர் இந்தியாவில் முறியடிக்கப்பட்ட பயங்கரவாத தாக்குதலுக்கு உடந்தையாக இருந்தவர்.

நான்காவது சந்தேக நபர் விடுதலை புலிகளின் வலையமைப்பின் தகவல்களை சேகரிப்பதற்கு பொறுப்பாக இருந்தவர் எனவும் காலித் அபுபக்கர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து போலி கடவுச்சீட்டுகள், மலேசியா உட்பட வெளிநாடுகளின் குடிவரவு துறையின் உத்தியோகபூர்வ முத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மலேசியாவில் இந்த வருடம் கைது செய்யப்பட்ட 14 விடுதலைப் புலி உறுப்பினர்களில் 7 பேர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயத்தின் அடையாள அட்டைகளை வைத்திருந்தனர எனவும் காலித் அபுபகர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


**UK, Switzerland, New Zealand, Canada Australia, Malaysia, Singapore**

**மாணவர் விசா & வேலைவாய்ப்பு**

**Diploma - Higher Diploma - Bachelors Degree**

* முழுநேர பகுதிநேர வேலைவாய்ப்புடனான கற்கைநெறி ஏற்பாடுகள்.
* 70,000 - 200,000/= வருமானத்துடனான ஹொட்டேல் பயிற்சியுடன், உல்லாச நட்சத்திர விடுதிகளில் வேலைவாய்ப்பு.
* Canada, Australia Skilled Migiration & PR

(C-7819)

Sikaram

3 வருட விசா செப்டம்பரில் பயணமாகலாம்

மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk 0777 324 004

இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்



**கட்டார் / டுபாய் / சவுதி ஆகிய நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு!!!**

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் ஏனைய முன்னணி நிறுவனங்களில் அதி உயர் சம்பளத்துடன் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| | Job Category | Salary - Food |
|---|---|---|
| 1 | Masons | 1200+300+OT |
| 2 | Airpot Plumbers | 1300+OT+Food |
| 3 | Electrician | 1400+OT |
| 4 | Helpers (Air Port) | 900+OT+Food |
| 5 | Furniture Carpenter (Experience) | 1500-2000+OT |
| 6 | Sites Carpenter (Experience) | 1500-2000+OT |
| 7 | Spray, Furniture, Painter | 1300+OT |
| 8 | Curtain Maker | 1300+OT |
| 9 | Car Mechanic | 3249+OT |
| 10 | Car Mechanic Helper | 1843+OT |
| 11 | Cleaners | 900+OT |
| 12 | Heavy Driver (First Time) | 1500+OT |
| 13 | Accountants | 2256+OT |
| 14 | Heavy Drivers Original GCC License is Must | 1800+200+Trip allowance |

நாளைய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

**டுபாய்**

| | |
|---|---|
| Carpenter | 1500-2000 + OT |
| Electrician | 1400-1600 +OT |
| Cushion | 1300+ OT |
| Cleaners (Indoor) | 900 + OT |

**Saudi Driver Free Visa** மற்றும **Saudi Baladia Driver Visa** க்களும் எம்மிடம் உள்ளன

தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி போன்றன இலவசம். ஒப்பந்த காலம் 2 வருடம் நீடிக்கப்படக்கூடியது. வேலை நேரம் 8 மணித்தியாலங்கள். கிழமைக்கு 6 நாட்கள் வேலை. ஏனைய நிபந்தனைகளும் விதிகளும் கட்டார் / டுபாய் / சவுதி நாட்டு சட்டதிட்டங்களுக்கமைவாக. கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்.

எதிர்வரும் 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் Green Grass Hotel இல் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்

Lanka Voice Hotline - 077 9527575 / 076 6697789

LL No.2248

AL/2248/ADVT10/14/11/15

capital recruitment international Pvt Ltd

No:130/3/1 3rd Floor grandpass Road, Colombo - 14

(C-7815)



**MBA**

TRUTH 1965 ALDERSGATE

**MASTER OF BUSINESS ADMINISTRATION**

**GENERAL / MARKETING / FINANCE / IT** DURATION : 1 YEAR



ACCREDITED AND UGC APPROVED

ADMISSION REQUIREMENTS

* A Bachelor Degree - must be from a recognized University or College.
* An Accepted Professional Qualification
* Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

**Week Day Batch** Mon, Wed, Fri: 6.30- 8.30 p.m

**Week End Batch** Sun: 9.00a.m - 4.00p.m

IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk

FOR MORE DETAILS
021 4 900 900
077 [illegible]

(C-7814)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.